LE
N[illegible]
59002

உ

பரமபதி துணை

புலஸ்தியர்

திருவாய்மலர்ந்தருளிய

# கற்பம் 300.

மூன்று காண்டங்கள்

OFFICE OF THE REGISTRAR
18 APR 19..

கோழிக்கொடி ஸ்ரீலஸ்ரீ வடிவேலானந்த சுவாமிகள் பரம்பரை அபிஷேகத கல்லூர் முத்து ராமலிங்கக் குருக்கள் என்று பெயர் விளங்கிய வடிவேலானந்த குருக்களவர்களின் குமாரர்

பண்டித ஸ்ரீ சிவஞானக் குருக்களவர்கள்

எட்டுப்பிரதியின்படி

மதுரை வித்வான்

த. குப்புசாமி நாயுடு அவர்களால்

பரிசோதிக்க,

மதுரை புதுமண்டபப் புத்தகஷாப்,

இ. ராம. குருசாமிக் கோனார் சன்

குரு. இராமசாமிக் கோன்

அவர்களால்

மதுரை வடக்குமாசி வீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் பிரஸில்,

பதிப்பிக்கப் பெற்றது.

இதன் விலை 1935 ரூ 0—14—0

ரிஜிஸ்டர்ட் காப்பிரைட்

செப்பனிடுபவர் பெயர்
த. இராசேந்திரன்
செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட நாள். ஜூலை, 93
செப்பனிட்டு முடித்த நாள் ஜூலை 93
4/8/93
சரிபார்க்கும்
மு.பா.எ.
கையொப்பம்.
பொறுப்புள்ள
உத்தியோகஸ்தர்
கையொப்பம்.
3/8/93
L.C.
No. 1825
615 [illegible]
5900-2

பரமபதிதுணை.

# புலஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# கற்பம் 300.

## முதற்காண்டம் 100.

மதிரவி யொளிபெற் றிலகுசெஞ் சடையில்
மலரிதழ்க் கமலமா யிரத்தெண்
மவுனகே சரியென் றிடவலம் புரியும்
மாதவத் தோர்களும் பணியும்
அதிவித அண்ட சிகரகோ புரத்துள்
வமுதசஞ் சீவியாம் வழலை
ஆதியு மந்தம் அருபமாஞ் சொருப
மதிலுதித் திடும்பரஞ் சுடரை
நிதியதாய்க் கும்ப முனியெனக் குரைத்த
நிராமயப் பொருளறி னாளும்
நிகழ்த்தவெள் ளேட்டிற் பதினெண்பேர் மறைத்த
நிர்மலக் கருவுகள் நாலுந்
துதிபெற விளங்கும் சுழிமுனை திறக்குஞ்
சுகாதீத கற்பசா தனையாஞ்
சூஸ்திர மிந்நூல் புலஸ்திய ரருளுஞ்
சுருதிவா ருதியெனுங் காப்பாம். (1)

வாருதி கமல மதிதரி சனமா
மைவரைக் கருத்தினை விளங்க
வசனமா யுணரத் தைமுத லுதயம்
வளர்பிறை யனுதினங் காலம்
பேருறுங் கும்ப முனியடி தொழுது
பிறைதிரி பிறையினின் றினமாய்ப்
பேணியோ ருறுதி வாலைபூ ரணத்திற்
பிரபைசந் திரனொளி பணிந்து
மேருறு சோம தியானமே யருள
வினவுசி மநயவ தஞ்சும்
விபரம தாக வாசிகொண் டேத
மெய்கண்ட தாரையி லடங்கப்
பாருறு சோம னிரவியிற் சேரப்
பானமென் றருவியும் பாயும்
பற்பமா ததியு மிருகரை புரளப்
பஞ்சாட்சர சாபமும் நிவர்த்தி. (2)

நிவர்த்தியிக் கருவை யுலகமா னிடர்க்கு
நிகழ்த்திட நீள்புவி யனைத்தும்
நிகர்கயி லாச மிடங்கொளா ததீதம்
நெஞ்சமே யுனதருள்புரிந்து
உவாகத் திடனும் மனமகிழ்ந் தடக்கம்
ஒருவருங் கற்பசா தனையை
உணர்வறி யாத படிநினைந் தருள்வ
துறுதிபெற் றனுதின முருத்தாய்த்
தவர்தலைத் தங்கள் தனிப்பிச காமற்
றசமெனு மாண்டுசெஞ் சரிக்கத்
தன்மய மறிய வாண்டுவொன் றமுரி
சாரணை சரம்பொழிந் ததுபோல்
அவரவ ரறிந்து அமுதசா தனைகொண்
டம்புவி மனிதரை யணுகா
தகலவுந் தனியே அனுசரி யாம
லமுரியுண் டதிசய மறிந்தே. (3)



உண்ணுவ ததித வுவமையொன் றுறுதி
யுனதுள்நின் றிலகுமிக் கருவை
ஓதுவ தாகி யந்தமு முனதுள்
ளொளிப்பது மொன்றிலை யகத்திற்
பண்ணுமா மறையோ ரருளுப தேசம்
பகரவுங் குருவினை யடுத்துப்
பன்னிரண் டாண்டு நடுவணை யமுரி
பயின்றுமே காட்சர மிதனை
எண்ணும் வார்த்திகமா யேத்தியே காத்தி
லிருவினை யொழிந்திட விவையும்
இயல்பெனுங் கோச விந்துவந் திலகும்
இருவினை யுடனருள் சார்ந்து
ஒண்ணவுந் தனதாய் ஒருமன தாகி
யோடுவ தமுரிமுன் னிலைவிட்
டொருதாம் பிடித்து நடுவணை யுட்கொண்
டுருச்செபி யகமிது தாமே. (4)

அகரமிவ் வெழுத்தோ டாதியாய் விளங்கும்
அமுரியே தினந்தின மருள
அரன்சிர சிதுவென் றறியும்நா தாக்க
ளடர்ந்தசூழ் சடைமுடி கோசம்
வகரதா ரணத்துந் தொழுதுடன் பணிவார்
மலர்முடி யாலயு மதனில்
வசியகோ புரத்துள் சிவலிங்க மறியும்
மனிதர்க ளறிந்துமே யறியார்
புகலவு மெண்சா னுடலதுக் குள்ளே
புவியெலாம் படைத்த ரட்சகனைப்
புகழ்ந்துமான் மழுவும் அறிவதும் புனல்தான்
பொறியெனுங் கதிர்மதி மண்விண்
செகமெனும் புவனங் கடலெனும் மேரு
சிவசெந் துகளெலா முதிக்குஞ்
சிவன்சடை யதனிற் கங்கைவைத் தொளித்த
சிவனெனு முபத்தமென் றறிவாம். (5)

உபத்தமா முருவி லோரிரு கருக்க
　　ளுதித்திடு முற்பன முணர
உலகெலாம் படைத்த அகாரமே விந்து
　　ஊசிநீ ரெனுமது சாரம்
சுபகலை யருவி சாரமே அப்பு
　　சுகாதீத மெனுமப்பு சலநீர்
சுருதியாஞ் சலநீர் சாரைவெண் ணாரவந்
　　துய்யவெண் சாரையு மமுரி
இபமிலா தமுரி பஞ்சாக்ஷர மிதனை
　　யிடைவிடா மலுஞ் சரமாறி
யேற்றுசா ரையுமோ ராண்டு மாறிடவும்
　　எறுஞ்சா ரணையினுற் சைலந்
தபவயி ராக்கியங் குருவரு ளாதனுற்
　　சாரணை யிரண்டுட னுதகந்
தைலமென் றதனை யடிக்கடி மாறச்
　　சடலமுஞ் சித்திய தாமே. (6)

சித்தியெய் திடுமூ வாண்டினிற் றேகஞ்
　　செடலமா திதமெலாம் வெளுத்துச்
சீறியே யரவ முரித்திடுஞ் சட்டை
　　தியக்கமில் லாமலும் வெளுப்பாய்ச்
சத்திய மிதுபார் தகைமையா யுரிந்து
　　சங்கையில் லாமலுஞ் சடலம்
சந்திரகாந்தப் பிரபைபோற் றேன்றும்
　　சாரையென் றமுரியின் வளப்பம்
வெத்தியாம் விந்து விதரண விசிதம்
　　மிகுத்துதா துகளுமே வலுத்து
வெகுவித விஷயம் மேலும்வே தாந்த
　　விவேகியா யுலகினில் வாழ்வாய்
சுத்தியாந் தேகம் அழிவது மிலையே
　　சுகாதீத வெகுவதி சயமாம்
சுருதியா யாகம அந்திசந் தியுமாய்ச்
　　சொல்மொழி யறிந்துகொண் டுணரே. (7)



உணர்ந்துசெங் கதிர்பார் முன்னமு ரியுமோ
　　ராண்டுகொண் டுறுதிசென் றதன்பின்
உகமையீ ராண்டி லடியெனு மூலம்
　　உகரமென் றறிமூலப் புளிதான்
இணையிலா தெனுமே உகாரமென் றதனை
　　யிருந்துவோ ருறுதியா யியம்ப
இதனையே துதித்துச் செபித்திடு முருவா
　　யிசைவதா யந்திசந் தியுமாய்த்
துணையதாய்ச் செபிக்க அகாரமாம் பீசந்
　　தோன்றியும் உகாரமே நாதம்
சூதமென் றறிய அகாரம்விந் துப்பு
　　சூட்சமிந் துப்பையு மறியார்
சுணையெனுந் துருசுபுளி மூலமிது தான்
　　சொன்னவிக் கருவதன் யோர்கள்
சுத்தமா மமுரி யுப்பது வாச்சு
　　சூதறிந் திப்பூவைச் சூட்டே. (8)

சூட்டிய மூலப் புளியெனு மமுரி
　　தொடுத்திடும் நசிமசி யிரண்டுந்
தோத்திரஞ் செபித்துத் துறையதா யுணரத்
　　திடியதாஞ் சருகுப்பு வலுக்கும்
சாட்டிய மிலைபார் சருகுப்புக் கட்டி
　　சங்கையில் லாமலுஞ் சுருங்குஞ்
சாக்ஷிதா னறியச் சருகுப்பை நீயுஞ்
　　சடமறிந் ததனைப்பாய்ச் சிடுவாய்
மாட்டிடு தினமும் மகிழ்ந்துநின் றுணர
　　மருகியே தேகமும் வலுக்கும்
மனதுறு தியினல் மவுனமாயுண்டு
　　வளமெனுங் காரமே சத்தி
ஆட்டியே வறுமை அணுகிடா திடினும்
　　அடிமூலம் உகாரசத் தியுமே
அனுதின மருந்தி நாதவிந் துணர
　　அற்புத தேகவச் சிரமே. (9)

மொழிவது மறிய அகாரமோ டுகாரம்
    மூட்டியே கூட்டிப்பூ ரணமாய்
மூன்றுஆண் டதனி லிரண்டொன்றாய் மருவி
    மூலமென் றமுதமே வுண்டால்
ஒழிவது விலகும் ஊழ்வினை யகலும்
    உடற்குள வருத்தமு மொழியும்
உள்மூல வாசிச் சுடரில்நின் றிலங்கும்
    ஓங்காரக் குண்டலி வசியம்
வழிவதா மமுதம் வாசியுஞ் சுடரில்
    மருவியே அமுதமும் வடியும்
வச்சிர தேகம் மரணமு மிலைபார்
    மனோமணி கிருபையு முண்டாம்
இழிவது மில்லை யெம்பிரா னருளால்
    ஏகமாஞ் சோதிப்பிர காசம்
இகபர மாயா காசமென் றதுவா
    யியம்பினர் முன்னவ ரினியே. (14)

இனியமா மூல மதனிற்கால் கொண்டே
    யெழுந்தண்ட வரையி லுலாவி
இந்துடன் மருவி யிதுபொருள் வாசி
    யிவையெனு மொடுக்கமெய் யடியை
வனிதருந் தாதி யமர்ந்திடு மட்டும்
    மண்டுமா காயத்தி லடர்ந்து
வையகந் தன்னில் மேகமாய்த் திரண்டு
    வகைபல வாகவே யிருந்து
மனியவே காரிய சாகரஞ் சூழ்ந்து
    வான்கதிர் மீளவு முயர்ந்து
மாறுகால் தாக்கிக் கதிர்மதி பெருமை
    மரக்காலைப் போல்வரு வித்துக்
கனியவவ் வுருவால் உவாது அகன்று
    களிம்பிலா மலுஞ்சுத்த சலமாய்க்
காருநீ ரதீத சலமதாய்ப் பொழிந்து
    கழிந்தது பூமியில் விழுந்தே. (15



பூமியி லிலகும் உயிர்பயிர்க் குதவி
    புவியெலாம் புலனது சொரிந்து
புவனமா திதமும் வாரிநீர் பொழிந்து
    புகழ்ந்துடன் செந்துகள் தழைக்க
வாமங்கொண் டவைகள் மதியெனு மமுரி
    மாறிட வெவாகற் றிடினும்
வாருதி நீர்போய் பளிங்குவெண் ணிறமாய்
    வருஞ்சுத்த சலமது வாகிச்
சோமநீ ரதுவாய்த் தெளிந்துபுட் கரணி
    சுகாதீத சிவகங்கை சூட்சஞ்
சுத்தவித் தெனவும் பொருளதா யறியச்
    சுயம்புமே தினியெலாம் படைத்துத்
தாமுமே விளங்குந் தரணியும் விளங்குஞ்
    சாட்சிகண் டிடமேகத் துகளுஞ்
சமுத்திரத் தமுநீர் தவசல மதுசெய்
    சாரநீ ரதுசுத்த சலமே. (16)

மேகவிந் தமுரி நீர்சுத்த சலமாய்
    மிருத்தமேதார் சைலமென் றதுபோல்
விந்துநீ ரதுபோய் சைலமாய்ச் செனித்து
    விரவியப் புவில்ரவி சேர்ந்தால்
வேகமே அதீதம் உகாரமிவ் வுருவாம்
    வீழ்விந்து உகாரமுஞ் சேர
விருப்பமா முதரம் நிருபுப் பிதுபோர்
    வினவுருப் பதுரவி பின்னை
வாருடன் மதிவிந் தெனும் ரவிநாதம்
    மதிரவி சாரமுங் காரம்
வருங்கார சாரம் இரண்டுமுன் னுருவில்
    மகிழ்ந்துகொண் டதுதெளிந் திடுநீர்
யோகமாஞ் சத்தி சிவந்தனைத் தொழுது
    உறுதிவைத் தொருமன துனதுள்
உற்பவ மறிய மகாரயாந் தீட்சை
    யுடனவை யடக்கம்வைத் திடுமே. (17)

அடக்கம்வைத் தறிவில் மனந்தெளிந் தோர்கள்
அகலநின் றருள்தெளி யாதோர்
அப்புவி யாந்த ரனைவரி லொருவன்
அடுத்துமே குருவருள் காத்தோன்
கடக்கநின் றோர்கள் கருவறிந் தனர்கள்
கருத்தினிற் கற்பசா தனையைக்
கருவறி யாதோர் கருத்துடன் குருவின்
கடாட்சமே கருணையா னந்தம்
கொடுக்கவுங் குளிர்ந்த குவிந்ததோர் மனமாங்
குளிரிலாக் கல்லுமே கல்லு
கூர்மையென் றதுகல் குளிர்ந்தகல் லூணிக்
குறித்திட மவுனம தாகும்
வெடுத்திடா மவுன மெனுஞ்சிப்பித் தோடு
மிவையதை யடக்கம தாக
வெளிவரா திடினும் மிகவறு சரித்து
விவேகமாய் வரவழைத் துணர்வாம். (18)

வரவழைத் ததனை தெளிந்தவ ரமுரி
மதிசுத்த சலமதிற் காய்ச்சி
மதிசலஞ் சுண்ட வதிதசுத் தியதாம்
மவுனமாஞ் சிப்பிதோ டெடுத்துத்
இரமெனுந் தீக்ஷை தசவரை யாண்டு
செய்தவர் சருகது சமனாய்ச்
சேர்த்துட னதற்குச் சரிநிகர் கூட்டித்
தெளிந்தவ ரமுரியா லாட்டிக்
குரைவரு காமற் காயப்பா லமுரி
குறித்துச்சொன் னவர்சிரந் தெரிக்குங்
குவலய மனிதர் வாசம்வீ சாமற்
குறித்தமை அரைத்துடன் மெழுகாய்
பாவச மிதுபார் வில்லைய தாக்கிப்
பானுவென் றதிதமாய் ரவியிற்
பண்புடன் காய்ந்து பின்புநீ யதனைப்
பக்குவ மாயெடுத் திடுமே. (19)



பக்குவ மறிந்து அகலில்வைத் ததன்மேல்
பதியமே லோடது மூடி
பகர்ந்துமண் சீலை சந்துகள் தெரியாப்
பரிவுடன் செய்துபின் புடத்தில்
மிக்கவ மிலாமல் விளங்கிடுஞ் சாவல்
விபரமாய்ப் போட்டெடுத் ததனை
மிகுந்ததோர் குருவி னருளினால் மலர்ந்து
மிகநிறந் தூய்யவெண் வெளுப்பாம்
புக்குவ தமுரி மதிசல மதனிற்
புனலதிற் பணவிடை தாக்கிப்
புகழ்பெற வுட்கொண் டனுதினம் பூசி
புதுமையென் றுக்கையும் வலுக்கும்
இக்குவ லயத்தோ ரிதையறி யாம
லிரந்துண்டு பொருளறி யாமல்
இயாவரும் திகைத்து இறப்பது சதமென்
றிருந்ததி னாலெமன் வினையே (20)

எமலபி யகற்று மிகபாங் காட்டு
மிளவய தாகிடும் நரைபோய்
இறப்பிறப் பகற்றுங் குருபர னருளா
லிகழ்ச்சியென் றெண்ணிட வேண்டாம்
உமையவ ளறிவா ளிமையவர் காண்பா
ருண்டிடு மமுரியிற் றுக்கி
உடலண்ட பற்ப மெடுத்துப்பக் குவமா
யுறுதியாய் மண்டலங் கொண்டால்
நிமைநிமைத் திடும்போய் உன்னுட சரீரம்
நிகரிலாச் சட்டையும் உரிந்து
நிச்சய மிதுபார் நினைவதாய் நிகழ்ந்து
நீடூழி காலமும் வாழ்வாய்
தமைகழித் தாண்டில் அமுரியுண் டிடக்க
சடுக்கள்போய் வினையது அகலும்
தரித்திரம் நீங்கிக் கனகமாஞ் சடலம்
சரித்திர மிதுகரு வாமே. (21)

ஆகுமப் புவியி லாரறி வார்கள்
அண்டத்தின் கூறதி சயத்தை
ஆதியா மீச னருளிய கல்லுப்
பறிவதே அண்டமே மவுனம்
பாகமிவ் விதமாய் அடிநடு முடியும்
பகருஞ்செய் பாகமும் வகையாய்ப்
பகர்வது கவன முடனருள் காலம்
பலவர்த்த மான மு முறைப்
போகியா காமற் கருவுரு வதுயேர்
பூட்டிடுங் கருத்துமே புகல
புதுமையாய்ச் செவுன கேசரத் தருளின்
புகழுடன் கிரிகைவிட் டகலா
சோகசீ காமாம் நிலைதவ ருமற்
றொழுதுட னிருக்கவுந் தல்முந்
தோத்திர மாகக் கவனமில் லாமற்
றெருடுகுறி சங்கைக ளறிந்தே. (22)

சங்கைக ளனேக மதையெடுத் துணர்ந்து
தன்மையும் வண்மையுஞ் சகத்திற்
சாவதோ ரொளிப்புஞ் சாஸ்திர மறைப்புந்
தனையெலா மறியரூஸ திரமாய்த்
திங்களு மதியும் ரோமனும் நிலவும்
சிவனுமே சிரசில்வைத் தொளித்த
செகமெலாம் நிறைந்த சந்த்ர புஷ்கரணி
செயலெலாம் வளமதாய்த் திருத்தி
மங்களம் புகழும் அகத்திய முனிவன்
மாட்டிய தவத்தினு லருளும்
மனமகிழ்ந் தடியோன் புலத்திய னெனும்பேர்
வசனமா யிரத்தின்ரூஸ் திரமாம்
கெங்கையென் றமுதஞ் சடைமுடி கோசம்
சிர்பாகா கிருபையும் விளங்கக்
கேசர மெனும்பேர் கற்பசா தனை நூற்
கேள்வியென் றறியுரை செய்வாம். (23)



செய்விதப் பரீட்சை திருத்தமா யருளச்
சித்தர்கள் பதினென் பேரெடுத்துச்
செய்குரு முனியால் அடியனுய்த் தொண்டு
தேறியே தெளிந்துரு வாகி
மைவிழி யுமையாள் மலர்ப்பதம் பணிந்து
மதுரசெந் தமிழினுல் நாளும்
வசனமாய் ஞான வழியறிந் துணர்ந்து
மதியினுற் கற்பசா தனையைக்
கைவசப் படுத்திக் காயமே வலுத்துக்
கனகமாந் தேகம தாக்கிக்
காரமுஞ் சாரங் கருக்களின் சூட்சங்
கதிர்மதிக் கருத்தினை யாய்ந்து
ஐவகைச் செயநீ ரமுரியென் றறிந்து
அமுதசஞ் சீவியால் மாறி
அகாரமென் றருளின் உகாரமே வலுத்து
அப்புவா லுப்புங்கட் டுணர்ந்தே. (24)

உப்புவா லப்பு உவரது நீக்கி
உகாரத்தால் அகாரமே கட்டி
உடற்கச டகற்றி யொருவழிப் படுத்தி
பூசிடுங் கண்டகா ரையினில்
அப்புவா லாவி யனுதினம் வாசி
யகன்றுபோ காமலும் ரேசி
ஆவபூ ரகத்தி லடங்கிடு மாறு
லடர்ந்துரும் பகத்தினி லொடுங்கி
இப்புவி தனிலே யிருந்துமே மூல
மிதுநடு வனையினிற் கும்பித்
தியல்பெறக் கண்ட தாமையி லூதி
யிசை வதாய் வசப்பட வாசி
முப்பது முடிய ஆண்டுபத் தாசான்
முறைப்படி குருமுடித் துரை
முடித்தவிச் சூட்சம் சித்தருக் குரைக்க
முடியது வணங்கினே முணர்வாம். (25)

வணக்கம்வைத் தன்பாய் மகத்துகள் தொழுது
வசனவை ராக்கிய மொருசார்
வடிதொழு தனையோ ரிதுகரு விளக்க
மறைபொருள் விரித்துதான் விளங்கும்
இணக்கமாய்த் துதித்து ஐவகைப் பொருளை
யினமதாய்ப் பிரித்துரைத் திடுமென்
றிணங்கிடு மாசான் அகஸ்தியர் கிருபை
யெய்தவு மிருகரங் குவித்துக்
குணங்குறி யாக வுபதேச மளிக்கக்
குவட்டுசித் தர்களு மேகக்
குவலய மனித ரனைவரி லொருவன்
குறித்துடன் கற்பங் கொண் டுணரச்
சுணங்கள்போ யடுக்கத் தவநெறி யாகச்
சூட்சமென் றருள்திரு நடனந்
தொடுநெறி காட்டி யெடுத்துநூல் கொடுத்துச்
சுழிமுனை யறியவுஞ் சொல்வாம். (26)

சொல்லுதோர் கற்ப சாதனை யதற்கே
சுத்தபத் தியமதை யுரைக்கச்
சொக்குநல் லெண்ணெய் கடுகுமீ னிறைச்சி
துப்புந்தாம் பூலத்தின் சுண்ணம்
கொல்லவந் திடுங்கள் ளபினிசா ராயங்
கூத்தனுங் கோரங்கர் மூலி
கோழியோ டெருமைப் பாலுங்நெய் புகையுங்
கொங்கை மின்னார்களின் போகம்
அல்லொடு பகலும் மனதுசஞ் சலமும்
அம்புலி மனிதர்க ளுறவும்
அதிகநித் திரையுஞ் சோம்பலுங் கோபம்
அகற்றியிவ் வழியொலா மகல
நில்லுநன் னெறியாய் நெறிதவ றுமல்
நினைத்திரு வதிநடை கடா
தீபசும் பாற்பச் சரிசிபோ சனங்கொண்
டினமதா யிருந்திட வியல்பாம். (27



இருந்திடப் பாசிப் பயறொடு மிளகு
மினமதாய்ச் சீரகம் பசுநெய்
இயல்புளி யாரைக் கரியவேம் படுவு
மிலைக்கொருக் காயத்தின் புளியும்
வருந்துசம் பழச்சார் புளியதின் தளிரும்
வருப்பது சிறுகீரை வழங்கு
மதியில்நித் திரைபோய் ரவியில் நித்திரைசெய்
மனது வைராக்கிய தவமாய்
கருதிடு மனதின் கசடது அகற்றக்
கருணைகூர்ந் தருள்சொர்க்க பதமே
கருத்தது நிலைக்க ரவிமதி இசைந்த
கடாக்ஷம்பெற் றய்யசிவ பூசை
குருபரன் கிருபை அந்திசந் தியுமே
குறைவறு காமலுஞ் செபிக்கக்
குறித்திடுஞ் சடலந் தீவினை யகற்றிக்
கோபத்தீ பிரிந்துபோய் விடுமே. (28)

கோபாக்கினி யகன்று அங்கியு மதுபோய்
கூர்ந்துமெய் நிலைத்திடு மாகிற்
கூத்தனு மதிதான் திரோதகை யாகிக்
கொல்வரும் மாயையு மகலுந்
தபாதவம் நிலைத்துச் சிவவிந்து மழுரி
தான்திருச் சத்தியைப் பூசி
தவம்நிலைத் திடுமே காயசித் தியுமாஞ்
சருகிடா திருகற்பம் நிலைக்குஞ்
சபாசரப மகலுஞ் சதாசிவ னெனும்பேர்
சடலமும் வலுத்துசா ரணையால்
சர்வசித் துகளும் எட்டெட்டு மாடுந்
தானிமா னிடவரில் தசவாண்
டாமது அமுரி யுலப்புளி யிரண்டாம்
உடல்வினை யகலு மூன்விதமாம்
உலகமா னிடரும் இதையறி யாம
லுய்ந்டதோர் அனுமும் விட்டனரே. (29)

அனைத்துமே படைத்த சிவமது சலநீர்
　　அகாரமே அமுரியென் றிடலாம்
அறிவது சத்தி உகாரமென் றிடலாம்
　　அதீதமாம் புளியெனு மதுபேர்
புனலெனு மமுரி பொருந்திடா மனுமே
　　புவிதனில் மனிதர்கொண் டவமாய்ப்
புலப் பத்தியஞ் செய்தனர் சடலம்
　　பொல்லாமை யால்வாயு மீறி
வினையது சூழ விலக்கமாட் டாமல்
　　விதமறிந் ததையகற் றாமல்
விந்துநீ ரகற்றி விவேகமு மறந்து
　　விழலதாய்ப் புலம்பியே பிணியால்
தனதுபுத் தியும்போய் சத்தியென் றறியார்
　　தரணியில் மாதர்கள் நாதஞ்
சத்தியென் றெனுமாய் மாதவி டாய்கொண்
　　டப்புவி தனிற்றயங் கினரே. (30)

தயங்குமா னுக்கர் அவனியில் மாதர்
　　சைகையே செய்துமா தாந்தம்
தனையுணர்ந் துட்கொண் டதீதநோய் பிணிவந்
　　தனலினும் சயமீளா காச
மியங்குவ ரதீதம் சடலமு மழிந்து
　　மிகவினை சூழ்ந்துமாண் டிடுவார்
மீண்டிடா தறியா துண்டதோ ரமுரி
　　விடாமலு முண்டுணர்ந் தோர்க்குத்
தியங்குவ தில்லையே தேகமு மழியாச்
　　செலமன லதுக்குமே ஆசையா
திருத்தமா மூலப் புளியது வாகுந்
　　தெளிவதோ ரமுரியுப் பாகும்
மயங்குவ தில்லையே புளியுட னுப்பு
　　வகையறிந் துட்கொள வசனம்
வச்சிர தேகஞ் சிவனருட் சத்தி
　　மதிரவி யெனவறிந் துணரே. (31)



அறிந்து மிப்பொருளை யசங்கிதப் படுத்தா
　　தமுதமென் றிதையறி யாமல்
அடுத்துமே உட்கொண் டனுதின மறவா
　　தாக்கையும் வலுத்துமே பலக்கும்
நெறியிது கற்ப மமுரியு மாதல்
　　நிகழ்த்திடப் புளியுப் பிரண்டும்
நிசசத்தி சிவமா யிதுவுட னுயிர்தா
　　னிவையறி பருகியு ஷதிதான்
பிரிந்திடா தெனுமே சுடரில்நின் றிலங்கும்
　　பெருமைதான் கொடுமுடி பேதம்
பிரமாண்ட மாமேரு மதிகயி லாசம்
　　பின்னுமே உரைத்திடப் பிசகா
தெரிந்திடு மண்டந் தனிற்சிவந் திருக்குந்
　　தீயெனுஞ் சுடர்ஜெனித் திருக்குந்
திகைத்திடா திடினும் பூரண வழலை
　　செய்தியாம் பிறத்தியாய்த் தனியே (32)

தனியதாய்ப் பிரித்து அகாரமாண் டொன்றிற்
　　சாதிப்ப தெனுமமைப் போனுய்ச்
சற்குரு வெனப்பீங் கானத்திற் சுடரைத்
　　தாக்கிப்பூ நீரதின் சமனாய்
இனியதாய்ப் பிசைந்து ரவிதனி லிருக்க
　　இளகிடும் ரவிமுகந் தனிலே
எம்பிரா னருளா லியம்பிட விளிக்கே
　　ளெவர்களு மறிந்திடா மனுமே
கனிந்திடு மிதற்கு நிகரது வாகக்
　　கற்பூரஞ் சரிசமன் கூட்டிக்
கருதியே நாலி லொன்றிடு சாரங்
　　கலந்ததைக் கல்வத்தி லாட்டிச்
செனித்திடா ததுபின் ரவிதனிற் றுக்கிச்
　　செவ்விதப் பரிசைகண் டினிக்கேள்
தீர்க்கமாஞ் சுடரு மெழுகது வாகுந்
　　தெளிந்திட்டீர் சுடரிது வாமே. (33)

சுடர்மெழு கதனைச் சொல்லவு மெளிதோ
சூட்டும்பூ நீர்மூலப் புளிதான்
சுத்தமாய்ப் பத்தாண் டுகமையாய்க் கொள்ளச்
சுகாதிதச் சுண்ணமாய் மலருஞ்
சடமதுக் கமூரி சாரம்பத் தாண்டு
தகைமையா யிரண்டுமூண் டிடவுந்
தபோபலத் ததனால் வழலைபூ ரணமுந்
தனியெடுத் ததுரவி படவே
புடமுழக் குகையிற் பொருமியே நீறும்
பூநீரும் புளியது வாகும்
புலனது அமூரி கரியுப்பென் றிதன்பேர்
புகட்டினார் மறைபொரு ளாகப்
படிக மூலதுள் ளிருகரு விளங்கும்
பாரிலி லண்டக்கல் வழலை
பார்த்திடு வெளியிற் சமாதிவைத் திருந்த
பக்குவ மிதுமூன்று முப்பே. (34)

மூப்புவிந் திடத்தில் முடிந்துமே யிருக்க
மூவுல காதித மனைத்தும்
மூடமாய்த் திரிந்து அலைந்திடும் பேய்போல்
முப்பூவை யறிந்திட லாமோ
செப்பவொண் ணாது செகதலத் தோர்க்குச்
செப்பினாற் செய்கைபொய்ப் படுத்துஞ்
செகந்தனிற் சுணங்கன் போற்றிரிந் தோர்க்குச்
சிவவிந்து நாதமுந் தெளியா
இப்படி யெண்சா ணில்லத்தி லிரண்டு
மிருப்பதும் வெளியிலொன் றிருக்கும்
இதுவெகு புதுமை யாவரு மறியா
ரேங்கியே வாதமுஞ் சுடுவார்
வெப்படி மூன்றும் விளக்கொளி போல
விளங்கிடி லிதுகுரு வாகும்
வெறிபிடித் தவர்போல் மேதினி தனிலே
வேடம்பூண் டிருந்துமாண் டனரே. (35)



மாண்டிடா மனுமே வழலைமுப் பொருளின்
வகையறிந் தறிவினில் மகிழ்ந்து
மதிபெறுஞ் சரிதை வழியிது சிவமாம்
வளர்பிறை சிவத்தின்கூ றெனலாங்
காண்டிப மிதுபார் கிரிகைசத் தியதாங்
கருத்தறிந் திகரூட கூறு
கனயோக ஞான வழியெனு மறியக்
கற்பமே சத்தியுஞ் சிவமாய்ப்
பூண்டிடுஞ் சத்தி சிவபூசை மார்க்கம்
பொருந்திடும் ஞானயோ கத்திற்
புகழ்பெருங் கமலம் பூரண வழலை
பொரியெனுஞ் சுடரதே மவுனம்
ஆண்டுபத் தெனவும் அமூரியும் புளியு
மானபின் சுடரண்ட வழலை
அதிதமா மெழுகு சமாதியோ கத்தி
லறுசுவை யகற்றியுண் டனரே. (36)

அறுசுவை யகற்றுங் காயமா மெழுகு
அமூரியி னனுவள வருந்த
ஆண்டிரு பதமாய் ஆவியின்பா லொன்றை
அனுபவித் திடுமரி தரிது
சொருபசித் தியதாஞ் சுடர்மெழு கதனாற்
சூட்சம சித்தியாஞ் சொன்னேஞ்
சுகாதிதச் சடலம் வலுத்துமே யிருக்குஞ்
சுழிமுனை திறந்திடு மவுனம்
பரவச மிதுபார் தவமது யிருத்துஞ்
பரவச மிகுத்திடும் ஞானப்
பரப்பிரம்ம வாசி நிலைத்துகுண் டலியிற்
பராபரன் தரிசின மெய்துந்
திறவுகோல் நந்தி யொளிவின்கூ றதனாற்
றூய்யவெண் ணமுதமாஞ் சரீரஞ்
சோதியாய் விளங்கும் தேவனென் றெனும்பேர்
சுத்தமெய்ஞ் ஞானியென் றறியே. (37)

சுத்தனு புலகிற் கற்பசா தனையாற்
சூக்ஷமப் பொருளதை யறிந்து
சுகவசீ கரமா யுலகிற்சித் தாடச்
சுடரெனுங் கல்லுப்புச் சுண்ணம்
வித்துவிந் ததித வுப்புடன் புளியும்
மெய்யினி லறிந்துபின் வெளியில்
வேகமென் றநித அண்டக்கல் லுப்பின்
விபரமாய்ப் பிரித்துயா னருள
சத்துடன் சித்தா னந்தபித் ததித
சர்வமா றிதமுஞ் சாமாய்ச்
சாக்ஷி நூற் பிறழாத் தகைமையா புணரச்
சண்டனு மனுபிடா திருக்க
உற்றதோ ராதி யந்தமர் யிலகு
முகித்திடு மாதியு மந்த
உவமையவ் வுருவில் அண்டபிண் டமுமா
புருவினை யின்னதென் றுரைப்பாம். (38)

இன்னதென் றுரைக்க யினியண்ட பிண்ட
மிதுக்குப்பேர் நாதவிந் தெனினும்
இதிலொடுங் கிருப்ப தெனுந்தல மறிய
இகபர வெளியினி லிருக்கும்.
உள்ளுவளே பரமா யுலாவிடு முயிர்தா
னொடுங்கிடும் போதுயி ருனைவிட்
டுருளையா மூலகில் ஊமையென் றறிய
உவமையெப் படியெனி லுரைக்க
அன்னமே பரமாய் அண்டமென் றதுவாய்
ஆதியுப் பரியவும் முடிவாய்
அந்தவுப் பதுவாய் அதுகல்லுப் பதுவாய்
அறிசிரந் துய்யவெண் ணிறமாய்
சொன்னசொற் பொருளாய்ச் சுத்தகல் வெளுப்பாய்ச்
சோதியாய்ப் பாப்பிரம மதுவாய்ச்
சுடரதாய்க் கமல சுபாடமோ டதுவாய்ச்
சுதனர னமுதெடுத் துணர்ந்தே. (39)



எடுத்துண ரமுது இனியுல கத்தி
லிடறுவா ராமலு மிருந்த
யீசனுண் டடவை யிதனைப் பேசாம
லிதனுட பெருமையென் றதனால்
தொடுத்தன ரீச னெனும்பிர பல்யந்
தோய்ந்திடுஞ் சொரூபசித் தியினாற்
சுந்தரப் பேர்கொண் டதிசய மிதனைச்
சொல்லவு மெளிதேதா னிலைபார்
அடுத்துமே நீச்சு அநீதநீச் சாரும்
அண்டத்தின் கூறினை விளங்க
அண்டக்கல் வெளுமை அதனினுள் ளழலை
யருவுரு கருக்குரு வாகுஞ்
சடத்திலுண் டான சாரத்தின் புளியைத்
தலைசிர சதுமுடி காரம்
தனிக்குரு வருளின் பாகுரு வண்ட
சாதனை யினியுரைத் திடவே. (40)

உரைத்திடும் வழலை முறைதனை விளங்க
உற்பன மெனும்பரா பரமாம்
ஒளிபொரு மண்டக் கல்லிதை யெடுத்து
உரலினி லிட்டுமே தாக்கி
வரையிருப் புல்க்கை மாட்டியே சாடி
மாவது போலதும் வருதல்
வகைவடித் தெடுத்து வளமெனும் பாண்ட
மதனிலிட் டமுரியென் றதுபார்
திரையிலாச் சுத்த சலமதை யூட்டித்
திருத்தமாய்க் கலாத்துடன் மூன்று
தினத்தியல் செலுத்திச் செயலதாய்த் தெளிந்து
தீர்க்கமாய்ச் சலமிருத் ததையும்
புரையிலாப் பீங்கா னதனிலூட் டாக்கிப்
பொருந்தவைத் திடுரவி முகத்திற்
பொருமிநீர் சுண்டும் பதமறிந் தெடுத்துப்
புகலவும் அமுரி விட்டிடுமே. (41)

அமுரியென் றறியா ரதுசுத்த கங்கை
ஆண்டுபத் ததுஜல நீர்தான்
அருணசா ரணையா லதுவுண்டு மாற
ஆணுடன் பெண்ணுமே கூடி.
வமுதமாய் வருதல் பரவிந்து நாதம்
மகிமையின் நீர்தனை விட்டு
வளமதா யூட்டி வகையுடன் கரைத்து
மாறவே மூன்றுநாள் தெளிந்தால்
கமுர் வருகாமல் முன்செய்த பதமாய்க்
கனரவி முகந்தனிற் றசநாள்
கருதிடு முறையாற் கரைததுடன் தெளியக்
கல்லுப்பின் கசடெல்லாம் நீங்கிச்
சமுசய மறிய வுவரது போகுஞ்
சர்க்கரை யதுநிற மாகுந்
தவறிடா தெடுத்துச் சம்புழச் சாற்றிற்
றகைமையாய்க் கரைத்தெரித் திடுமே. (42)

எரிக்கவும் நீர்சுண் டினிவருங் குமுத
யிதுபதம் வருதலிற் களிம்பத்
தியல்பதாய்ச் சிவந்த வெண்ணெயு மாறி
யிருப்பதாற் கல்லுப்பென் றிதுபேர்
கரிக்கி நீர் கசடு களிம்பது மருந்து
கைப்பது பரிசுத்த மெனுமாய்க்
கல்லுப்பின் பெருமை காட்டினார் பெரியோர்
கணடுங்கா ணுமனு மறைத்தார்
வரிப்பதுங் கசிவு மாறிடுங் களிப்பு
மகிமையென் றெண்ணெயும் நிலவாய்
மதிநிறம் வெளுமை பளிங்கதி னெளிவாய்
வருர்கவச் சிரமகின் வலுவாய்த்
துரியண்டச் சிப்பி யெனுமமு ரியிலே
துய்யவெண் கல்லுப்புண் டாச்சு
சுத்தமாம் பூநீர் வமலையப் பெனவுத்
தொடுத்துவர்ப் பூவெனப் பேரே. (43



உவருப்பென் றிதுபேர் உயிர்ப்புவென் றறியும்
உசிதமாஞ் சுத்தவிந் தெனும்பேர்
ஒளிவெளி யாதி யுப்புவென் றிதுபேர்
ஓகோகோ சிவமெனும் நாமம்
கவரதிற் கோடி சிவசத்தி பெருமை
கண்டிடும் அகாரமே உகாரம்
காட்டொண திரண்டும் அகாரமே விந்து
கருத்தறி உகாரமே நாதம்
துவல்விந்து நாகங் காரமுஞ் சாரஞ்
சொன்னசொல் லறியிதன் விபரஞ்
சுருதியாம் ப்ருதிவி அப்புவென் றிதுபேர்
சோதியப் புப்பது சேர்ந்து
தவறிடா மனுமே அப்புவுப் பதுவுஞ்
சார்ந்திட விரண்டுமொன் றாகிச்
சகலசித் தாக்குஞ் சற்குரு வாகிச்
சாரமுங் காரமுஞ் சேர்ந்தே. (44)

கார்கார சார கற்பசா தனையாற்
கருவுரு விரண்டுமொன் றாகிக்
கலந்திடும் பருவங் கண்டுபத் தாண்டிற்
கருத்துட னெடுத்திடு பாண்டம்
நீர்சுத்த அமுரி சலம்படி நாலு
நிகரில்லாப் புளியது படிதான்
நீயிரண் டையுமே கரைத்துவை தெளிய
நிகழ்நிரி தினங்கழித் திறுத்து
வார்த்தெடுத் திடப்பீங் கானத்தி லூட்டி
வசனியும் ரவிமுகந் தாக்கி
வற்றவைத் திடுநீர் சுவறிடு மமுரி
வார்த்துப்பின் கரைத்துமுன் தெளிவாய்
பேருற வாக ரவிமுகங் காயப்
பிரித்துமே தசவிசை மாறப்
பின்புசந் திரன்போற் சுத்தவெண் மையதாய்ப்
பிறங்குப்புச் சத்தியின் பேரே. (45)

பேருமைப் பொருளிற் பிறங்குமென் றறியும்
பேதமே பிரித்துயான் விளங்கப்
பெரியதோ ரதீதப் பரப்பிரம வஸ்து
பேசரி தெனினுமே பிரகா
பாருள பசுமை பசுந்துமண் தண்ணீர்
பச்சையென் றிதற்குப்பேர் சொலவும்
பாராசத்தி யுப்பு வென்றிதன் பேரு
பரியேம சத்தியென் றிதுபேர்
நீருள்ள நாதம் நாதாந்த மெனும்பேர்
நிகழ்த்திடுங் காரமென் றிதுபேர்
நேர்மையுள் ளதீதம் பூரமென் றிதுபேர்
நேர்மையாஞ் சத்தியுஞ் சிவமுஞ்
சாருமே யிரண்டு மொன்றதாய்ச் சேர்த்துச்
சம்பழச் சாற்றினா லரைத்துச்
சாடிமை யதுபோல்மெழுகது பதமாய்ச்
சருகிடா வழித்தெடுத் திடுமே. (46

இடும்ரவி முகத்தி லிதனைவைத் தியல்பாய்
இரவியிற் காய்ந்தபின் பதமாய்
எடுத்துப்பா ரிரண்டும் ஒன்றதாய்க் கூடி
யிருக்குமிந் துப்பினை யறியக்
கடும்ரவி முகத்திற் கலந்துப்பு அப்புங்
காரமுஞ் சாரமுங் கூட்டிக்
கதிரவ னொளியிற் கூட்டிடும் வலுத்துக்
கல்லுப்போற் சத்தியுப் பிருக்குந்
தடுத்தநின் பேரைக் கேளதின் நாமஞ்
சாற்றிட ஆதியுப் பதுவாந்
தற்பரா பரத்தின் பரப்பிரம வுப்பு
சற்குரு வுப்புவென் றிதுபேர்
விடுந்திடா பாத்துக் குயிரென அறிவாய்
மேல்மூடி மேருவா காசம்
விளங்கிய சத்தம் நாதமென் றுச்சு
விப்ரமும் ஆதியென் றறியே. (47)



ஆதியாம் விந்து அண்டக்கல் லுப்பு
அத்துடன் நாதவுப் பதுசேர்த்
ததுசரி சமனாய்க் கல்வமேற் றுக்கி
யத்தச்சம் பழத்தின்சா றூட்டி
ஓதியீ ராறு சாமம்விட் டாட்டி
யோர்மையாம் மையது பதமாய்
உப்பது வருதல் மெழுகது போலும்
உகமையாய் வழித்தெடுத் ததனை
நீதியாய்ப் பில்லை பிடித்துடன் ரவியில்
நிலைத்திடுங் கடுரவி முகத்தில்
நெறியதா யுலர வலுத்தகல் லதுவாம்
நேர்மையாய்க் கணிரெனி லெடுத்து
வேதியா மிதனைக் கொட்டிடுஞ் சத்தம்
வெண்கல நாதவோ சையதாம்
வெளியெடுத் தோட்டில் வைத்துமே லோடு
மிக்ச்சந்து மூடிமண் செய்தே. (48)

சந்துமண் சீலை சாத்தியே ரவியிற்
றனதை யெடுத்துமே சார்வாய்ச்
சற்குரு சிவத்தின் றவத்தினாற் பூசை
தவறிடா நிஷ்டையோ கமுமாம்
சுந்தர கண்ட தாரையில் வாசி
சுகமொரு கடிகைதா னாகிச்
சுழிமுனை திறக்கத் தொழுதுடன் றுதித்து
சுடரொளி மேவியே போற்றிக்
கெந்திர மவுன கேசர மெழுப்பிக்
கேசரி யெனுமடி பணிந்து
இலேசம்வா ராமற் கதிபெற வெளியிற்
கிருபைவைத் தொருமன தாகி
அந்தரசத்தம் விசும்புகொண் டருவி
யர்ச்சித்து மடிபணிந் தமிர்தம்
அங்கார தனைசெய் தொருமுமப் புடத்தி
லறிவறிந் தக்கினி மூட்டே. (49)

முட்டுமுப் பூவை முனியருள் போற்றி
முக்கிய மாகவும் புடத்தில்
முனிந்திடாத் தணலிட் டாறிடும் பதத்தில்
முப்புவை யெடுத்துடன் பார்க்கக்
காட்டுங்கை பாகங் காத்தொரு மனதாய்க்
காருமே காத்தெடுத் ததுபின்
கமலமா மலர்முப் பதும்நில வதுபோற்
காந்தியென் றறிவது மெளிதோ
பூட்டுமே திறக்கும் புட்பம்போல் நீறும்
பொருமியே சுண்ணம தாகும்
புகழது சுருக்காம் அதீதமாங் காரம்
போட்டிடு காத்தினி லணுவு
ஊட்டிடுந் துளிநீ ருடன்விடும் போது
உயிர்பதைத் திடுமொரு நிமிஷம்
உடலெலாம் வேகுஞ் சங்கதின் கனிபோ
லுடனேகொப் பளித்திடும் பாரே. (50)

பருங்கிரந் தியுமாய்ப் பழுத்துமே யுடையும்
பதறிடா முப்புவின் சுண்ணம்
பகர்பதி னெண்பேர் பாகதி யடையும்
பராபரன் தரிசன மாகும்
அருந்தவத் ததினால் ஆதியுப் பதீதம்
அநுக்கிரக சுண்ணமென் றிதுபேர்
அண்டக்கல் வழலை யருள்பெருஞ் சுண்ணம்
ஐவகைச் சுண்ணமென் றிதுபேர்
கருவியி லுதித்த மதிரவிச் சுண்ணங்
கமலமென் றதுசிப்பிச் சுண்ணம்
கருணையா னந்தக் கற்சுண்ண மிதுபேர்
கற்பூரச் சுண்ணமு மிதுபேர்
திருவினை லமைத்த கருவிதன் பெருமை
சிரோமய முப்புவின் சுண்ணஞ்
செகதலம் புகழும் சுண்ணத்தின் பெருமை
ஜெயம்பெறு சுண்ணமி தாமே. (51)



செய்தொழில் வண்ணான் சீர்பெற்ற மார்க்கஞ்
செப்புமுப் பூச்சுண்ண மிதுபேர்
சித்தர்கள் மறைக்கும் நாலுக்குங் குருவாய்த்
தெளிந்திடுஞ் சுண்ணமா மிதுபேர்
கைவசப் படுத்துங் கனகமென் றிதன்பேர்
கமலபொற் பதமலர்ச் சுண்ணங்
கற்பசா தனைசெய் விதத்தினால் முப்பு
கடாட்சம்பெற் றவர்செய்து முடிப்பார்
மைவிழி மாது மாயையி லடைந்தோர்
மனிதர்கள் முடிப்பது மரிது
மாமுனி யெனக்கு வுரைத்திய படியே
மதிரவி கற்பநூல் வசனந்
தூய்யவெண் ணமுரி சுத்தநீர்க் கங்கை
தொடுத்தவர்க் கொருதுன்ப மணுகா
துரோதகை யாசை வைத்தவர்க் கெய்தாச்
சுத்தவை ராக்கிய வானே. (52)

அயிக்கிய மிந்நூல் ஞானப்பிர சங்கம்
அருந்தவ ரனைவரும் புகழும்
ஆயிரத் துடனே நூறுமுந் நூறும்
அமைப்புடன் கற்பமுந் நூறும்
வயிக்கமா யாய்ந்து மாபதம் பெறலாம்
வழுத்துநூற் கிடைப்பது மரிதாம்
மாநிலந் தனிலே கற்பங்கொண் டமுரி
* வருஷமோர் பத்துமே உண்டாற்
செயிக்கலாம் முப்பூச் செய்கைகண் டறிந்து
சித்திமுத் திகளறிந் திடலாஞ்
சீர்பெரு மமுரி தெளியவே சுத்த
செலமது தயிலம தாகிற்
சுயிக்கலா மமுதஞ் சுரோணித மிதுபேர்
சொன்னமூ வாண்டினில் வேதை
சுகாதித வாத மெதிரில்வந் துலவுஞ்
சூட்சமு மின்னதென் றறியே. (53)

சூதைவே தைகளுக் கமுரியே சூட்சஞ்
சுருதியின் கற்பமுந் நூறுந்
தொடுகுறிப் பரிட்சைத் திறவுகோ லிதுதான்
சுகம்பெற வேதையுண் டாகும்
வாதநூ லதீதம் பதினெண்பேர் சித்தர்
வசனித்த நூல்களும் பலிதம்
வாசிகொண் டமுத கற்பசா தனையால்
மகாசித்து யாடிட லாகும்
பூதமைந் தமுரி புலனது மதனாற்
புகழ்சுழி முனையது திறக்கும்
பொறிசுட ரதனில் நடனமுங் காணும்
பூரணத் தேகவச் சிரமாங்
காதலென் றறியக் கசடறு மறுத்துக்
கசிவது மகற்றிநூ லறிந்து
கனகமா முப்பூச் சுண்ணமா மடக்கங்
கற்றதோர் குப்பியிற் கருவே. (54)

கருவது மறிந்து சதாசிவ மூலங்
கருதியே வாசி கொண்டு
கமலமா யிரத்தெட் டிதழினுண் மூலக்
கருணையா னந்தவா சியினால
அரியரன் முதலோ ரறிந்திடாச் சூட்சம்
அம்மூல மாஞ்சுழி மூலம்
அண்டமா மதனுள் ளயர்ந்துநின் றிலங்கும்
ஆதியாய் அந்தமாய்த் தோன்றும்
மருமலர்க் கனக வழலைபூ ரணத்தை
மறைத்ததி னால்மதி விளங்கார்
வளரடி மூல மதின்மேலா தாரம்
வருக்கவா தாரபோக் கதனைப்
பொருந்தவும் போக்கார் போக்கறிந் தருளால்
பொருள்கண்டு போக்கதை வருக்கார்
புதுமைகா ணார்கள் வாக்கறி யார்கள்
புகழ்மன தறிந்திடா தவையே. (55)



கருவின் பரிபாஷை.

மனந்தெளிந் தருளின் பொருள்தனைக் கண்டு
வருவதும் போவது மறிந்து
வளமைதா னறிந்து மாதவம் புரிந்து
மதியமு தத்தினால் மோட்சந்
தனதுநெஞ் சகமே தானது வறிந்து
தன்னெறி தனக்குள்ளே தவஞ்செய்
சதுர்மறை யோர்கள் ஐந்துரு வளப்பஞ்
சாதனை சித்திபெற் றனர்கள்
கனகமா ணிக்க மெனும்பொரு ளறிந்து
காட்டினோ மைந்துரு மூலங்
கசிந்திடும் நாவில் ருசியது மறிந்தாற்
காணுமைந் தருசுத்தி கருது
முனதுமுப் பொருளின் வியர்மொன் றறிய
முத்தியா மடிநடு முடியும்
முன்னடி மூலம் உகாரமீ தாச்சு
மூலமாஞ் சத்தியென் றிதன்பேர். (56)

சத்தியா வதுவே நாதமென் றிதுபேர்
தனைவிளங் கிடினுமே நாதஞ்
சாற்றிடி லிதன்பேர் மகாரமென் றிலங்குஞ்
சருகென்று மமுதமென் றிதுபேர்
புத்தியில் விளங்கும் வாசிதா னென்றும்
பூரணப் பச்சையென் றிதன்பேர்
பூத்திடு முவர்ப்பு அடிமூல மென்றும்
புகல்வதும் நடுமூல மறிய
மத்திய மிதுவே அகாரமே நடுத்தான்
வசனியும் அகாரமே சிவமாம்
மதுசிவ மரிய சிவமெனும் விந்து
மதியிது கங்கையென் றிதுபேர்
சித்தியும் விளங்குஞ் சைலமென் றிதன்பேர்
ஜெயசல சாரமென் றிதுபேர்
தெளிந்திடு மூசி நீரெனு முப்பூச்
செய்குரு வப்புவின் பேரே. (57)

பேரணி விளங்குஞ் சந்திரபுஷ் கரணி
பிரபல்ய கங்கையென் றிதுபேர்
பேதமென் றறியச் சமுத்திர ஜலமாய்
பிரிந்திட அறுவகை யிதன்பேர்
தாரணி மனித ரறியவு மிதனைச்
சடாதர வமுதமென் றிசைப்பார்
சங்கைக ளறிய விந்துவென் றிதன்பேர்
சரக்கில் வீரமென் றிதன்பேர்
சேரணி வீரஞ் சித்தர்வைப் பமுரி
செலுத்தினர் தீட்சைபத் தாண்டில்
செயவீர நாமமுட லிலுண் டான
செய்தியைப் புலத்திய னுரைத்தேன்
விரணி நடுத்தான் விளங்கினேம் அகாரம்
மேருவே மேல்மூல முடிதான்
மேன்மையா மமுதம் மவுனமா யாகி
விசிதமிப் பெயர்களின் விதியே. (58)

வீதியி லுதித்த மெய்ப்பொரு ளாதி
விசிதமாம் பரமெனு மிதுபேர்
மேருவி லுதித்த சத்தமென் றிலங்கும்
வெடியுப்புக் காரமென் றிதன்பேர்
சோதியாங் கமலச் சிப்பியென் றிதுபேர்
சுருதியாங் காரமென் றிதுபேர்
சுத்தமாம் பிறவி யானைக்கல் லென்று
சொற்[illegible]கும் பிடுகல்லென் றிதுபேர்
நீதியாய் விளங்கும் ரவியெனும் பரமாய்
நிலைத்திடுங் கல்லுப்பு எனும்பேர்
நீச்சுவெண் கல்லு ரும்பமென் றிதுபேர்
நெஞ்சரி பவுனக்கல் லிதும்பேர்
மேதினி தனிலே விளங்கிய வழலை
மிருத்ததோ ரூமைமென் றருளா
விசிதமா யரிந்து வழலை யுப்பிதுபேர்
வெள்ளைக்கல் லெனுமிதன் பேரே. (59)



ஆண்டின் விபரம்.

கல்லுக்குள் வழலை கருத்தினை யாய்ந்து
கற்பநூல் விளங்கிய சூஸ்த்திரம்
கமலமா யிரத்தெண் மலரினி லமுதங்
கற்பசா தனையுண்டு தேறி
சொல்லெனுஞ் சுருதி சோதியாய் விளங்குஞ்
சொன்னதோர் முப்புவை மறைத்தார்
தொடுதிநூல் கோடா கோடிசூஸ்திரமாய்த்
தொடுத்தனர் சரம்பொழிந் ததுபோல்
இல்லத்தி லிருந்து யிதுகரு முடிக்க
எவர்களி னாலுமே முடியா
எடுத்தறிந் தோதி வெளிப்பட்ட நூல்கள்
இகழ்ச்சியிப் பொருளைவிள் ளாமல்
தொல்லையாய் மறைத்துச் சூட்டினர் பெரியோர்
தொடுத்தின்னூற் கோடியி லொன்று
சூஸ்திர மறியார் கோர்வைநூல் பார்த்தும்
சுணங்கனைப் போலலைந் தனரே. (60)

அனைவரு மறியார் அறிந்துமே விமலா
யாடினர் வாதஞ்சுட் டலைந்து
அண்டக்கல் லுப்பு வழலையின் பெருமை
அறியாமல் மாண்டனர் சிலபேர்
கனம்பெருங் கருவே காமப்பா லறியார்
கானற்பா லின்னதென் றறியார்
கருவிது ரெண்டுங் காரமுஞ் சாரங்
கண்டுங்கா ணாமலு மடிந்தார்
முனைதரும் பயிலரில் மூலமே புளிதான்
முக்கிய மெனும்பொரு ளமுரி
மூலவா சியினா லிதுரெண்டு முத்தி
முன்னமே அமுரியோ ராண்டு
இனமறி யாமல் இகழ்ச்சிகள் செய்தார்
பீராண்டிற் புளியறிந் துண்ணார்
இகபர கதிக்கு இதுகற்ப சூஸ்திரம்
எய்தினோர் கதிபெறு வாரே. (61)

கெதிபெறுங் கருவை வெளிவிடா தடக்கிக்
 கீர்த்திவா ரொருவனுண் டுறுதி
கேள்வியாந் கருக்குக் கருவிதென் றுணரார்
 கேசரி யின்னதென் றுணரார்
அதிவித கருக்கள் ஐயுற விளங்கார்
 ஐவகைச் செயநீரென் றருளார்
ஆண்மைபெற் றவரோ டதிசயம் பேசார்
 அசத்தினி லிருப்பதை வகுக்கார்
மதியெனும் விளங்கார் மருமலர் வாசம்
 மகிழ்ந்துபூ மலரையும் வழங்கார்
மனதுகூர்ந் தறிவிற் கருத்துகந் தமுத
 வாசியை யின்னதென் றுரைக்கார்
பதியமு தண்டப் பாமெனு மவுனம்
 பரிசுத்த அண்டமென் றமுதம்
பாடுபட் டுழைத்துப் பத்துடன் தீட்சை
 பரிட்சைகண் டமுதமே பணியே. (62)

வெடியுப்புச் சுண்ணம்.

பணிந்துசற் குருவின் பதமலர் போற்றிப்
 பாடினோர் கற்பநூல் பலிதம்
பார்த்துசித் துலகிற் பாரில்நின் றுடப்
 பகருவேன் வெடியுப்புச் சுண்ணம்
மணிந்துலகத்தில் மனிதர்செய் யுப்பு
 வழக்கமாய்த் தொண்டுசெய் திடினும்
வரிசையாய் விளங்கும் பாகங்கை கண்டு
 வாங்கிடிற் காச்சலைந் ததனிற்
துணிந்துல கெனுமே கம்பியுப் பிதுதான்
 துய்யபீங் கானதி லூட்டிச்
சுகநடு வான பச்சைநீ ரமுரி
 தொடுத்துவிட் டதைக்கிண்டி ரவியில்
அணிந்துஅம் முகத்தி லமுரிசுண் டிடும்பின்
 அப்படி நீர்விடும் பத்து
அதுமுறைப் படியே அருணனிற் காய்ந்து
 அடிக்கடி நீரைவிட் டுலர்த்தே. (63)



உலர்த்திட ரவியி லுண்டிடு மமுரி
 யுப்பது முலர்ந்து காய்ந்ததன்பின்
ஓருமீ ரைந்து முறைப்படி தீட்சை
 யுறுத்தமா யுலர்ந்தபின் பார்க்கச்
சலமதின் கசிவுங் கசடதி னூறல்
 தானது விலகிடும் ரவியால்ச்
சங்குபோ லிருகிப் பச்சைநீ ரதனாற்
 தடங்களில் லாமலும் வலுத்து
நிலவுபோ லொளிவாய் நிகரிலா மலுமாய்
 நிறமெனும் வெள்ளைக்கல் லதுவாய்
நேர்மைகட் டினமாய்ப் பொறிபுகை விலகி
 நிசமது கம்பியுப் பதுவாய்
பலபல நூலிவ் விதமெடுத் துரையாப்
 பளிங்கது போலவுங் கட்டி
படபடக் கிலையார் அழியிது மூலம்
 பகர்ந்திடுந் தந்தம்போ லாமே. (64)

தந்தம்போ லிருகி வலுத்தகட் டதுவாய்த்
 தவளமிந் துப்புவென் றிதுபேர்
தனித்தவிந் துப்பு வெடியுப்ப தாச்சு
 தகர்ந்தநீச் சிதுவெகு நீச்சு
விந்தையாய்க்கட்டும் வெடியுப்புச் சுண்ணம்
 விளக்கமாய் விரித்துயா னருள
வெடியுப்புப் பலம்பத் தியக்கமில் லாமல்
 விந்துவென் றமுரிபுப் பதுவுந்
அந்ததோர் மூலப் புளிசரக் கதனால்
 அதுரெட்டி கூட்டியே வகுத்த
அமுரிவிந் ததுநீ ராட்டிடு மதனை
 ஆறுசா மங்களில் மெழுகாம்
வெந்துவே கமதாய் விம்முமேதள்க் கொடுக்கால்
 மிகவுமே கொட்டிடும் கொடுக்காம்
மேலுமே வேகும் சம்பழச் சாறை
 விட்டிடை விடாதரைத் திடுமே. (65)

புடத்திட்ட விபர முறை.

அரைத்திடக்குழறும் அதுபதம் வருதல்
அஞ்சுசா மத்துமச் சார்விட்
டானதவ் வீதம் ஆட்டிடுமெழுகாகும்
அதைவழித் துவட்டதாச் செய்யப்
புரைவரு காமற் பலரவி முகத்திற்
புகழதாய்ப் பசுமைகாய்த் ததுபின்
புனிதமா யெடுத்துக் கொட்டிப்பார் சத்தம்
புதுமையில் விதமென்ன வெளிதே
உரைக்கவுன் னிதமாய்க் கனீரெனுஞ் சத்தப்
உற்பவ முதித்ததா லோட்டில்
உடனதி லாட்டி யோடுமேல் மூடி
உவமைமண் சீலையே மூணர்ந்து
தரையெனும் புவியி லிருமுழக் குழியிற்
றனியதாய்க் காட்டெரு மிகவுந்
தரும்படி மேவித் தணல்கொடு புடம்போட்
டதுபுட பருகிருப் பதுவே. (66)

சீலமண்செய்ய விபரம்.

அருகிருந் தனது மாறிடும் பருவம்
ஆறியே புடம்பிரித் ததன்பின்
அடக்கமா யிருந்து வெடியுப்புச் சுண்ணம்
அதுவென்ன மலர்ந்தி றின் றினமாய்
மருமமா மலர்கொண் டதிதமாங் கல்வ
மதிலிடு மதுமல ரூட்டி
மகிழ்மூலப் புளியுண் டதில் வருமமுரி
வசனியந் நீர்வருங் காலம்
கருவுநீர் நாதங் கார நீர் தாக்கிக்
கலக்கமைப் போலவும் பதமாய்க்
கடூரமாஞ் சுண்ணம் வழித்துவட் டதுவாய்
கதிரவன் முகத்தினிற் காயக்
குருவனுக் கிரக கடாக்ஷம்வைத் தருளாற்
கொடுரவி தன்னிற்காய்ந் தெடுத்துக்
குடகுவோ டதனி லாட்டிமே லோடு
குறிப்புடன் மூடிச்சந் துணர்ந்தே. (67)



சந்துமண் சீலை சாத்திடும் பதமுஞ்
சமமதாய்ப் புடமதிற் பாத்திச்
சமர்ப்பித்து வன்னித் தணலுமே மூட்டித்
தனைக்கரு காமலும் விளங்கா
முந்தவும் புடம்போட் டெடுத்துப்பா வனையா
முதரிடா மருமல ரதனை
முகதரி சனமா யுதசந் திரன்போல்
முப்புரமெரித்தநீ றதுவாய்ச்
சந்திர நிறமாய்த் தவளம்போல் மலர்ந்து
சாரைவித் ததுசல நீராய்ச்
சங்கையில் லாம லதீதமாங் காரந்
தரணிமா னிடர்களு மறியார்
சுந்தரக் குப்பி யதனிலுண் டாக்கிச்
சுகாதீதச் சுழிமுனை யருளிற்
சுயகுரு பாதத்தி னடிதொழு தித்தச்
சுண்ணமே பதனஞ்செய் வீரே. (68)

செய்தொழிற் பாகந் திருத்தவு மரிது
தீட்சைபத் தாண்டுமே தெளிந்தாற்
செப்புவென் மலரு மனதறிந் தறிவார்
செலுத்தியம் மனதையுங் காத்தோர்
வையக முழுதும் புகழவே யாள்வார்
வான்புவி யேவல்செய் திடுமுன்
மனந்தெளி யாதோர்க் கிம்முறை யனுகாக
மதிரவி கற்பத்தா லெய்துங்
கைவசப் படுமே காரமுஞ் சாரங்
கற்பத்தாற் கைவல்யப் படுதல்
கருணையா னந்த மமுரியே காரங்
கடாட்சத்தி னாற்கலி நீங்கும்
ஐயமென் றெண்ணா தமுரியை யடுத்து
அசலடிலா மலுஞ் சிவ தீட்சை
ஆண்டொரு வருடந் தவறிடா மலுமே
அகாரமாஞ் சரமாறி யேத்தே. (69)

எத்துயோ ராண்டு இதுகழிந் ததுபின்
எள்ளள வாகிலும் பிசகா
இதுவேகாட் சரபஞ் சாட்சர மென்பார்
இவ்வுயி ரெழுத்தினைத் தினமும்
வேத்துமைப் படுத்தா தநிதசா தனைசெய்
மிகவொரு நாழிகை யிதுபோல்
விளங்கினார் அறுபது நாழிகை கடிகை
விருப்பமென் றறிந்தொரு நாளும்
காத்திவரி லிருந்தென் கானலி லிருந்தென்
கனமழை பொழிந்திடி யிடித்தென்
கனவழி நடந்தென் சோம்பலில் லாமற்
கற்பசா தனைவசப் படுத்தும்
மாத்திரிற் கண்ட பற்பங்கொண் டமுரி
மவுனமாஞ் சுத்தவை ராக்கிய
மனிதரோ டிணங்கா திருந்தறிந் திடாமல்
வசப்படுத் தாண்டு சாதித்தே.

கரியுப்புக் கட்டு.

வாதியாய்ப் புவியில் வாழ்வதற் கரிய
மவுனமாங் கரியுப்புக் கட்டு
வகுத்திடுந் தெளிவாய் வகையதா யுரைக்க
மகத்துக்கள் மறைத்திடுஞ் சூட்சம்
பேதையென் றுலகிற் பெருத்தருள் மூலி
பிரகாசக் குதிரையி னடிதான்
பிரளிலா மூலி குளிமீட்டா னின்றும்
பெருந்தும்பை தாழையு மேனி
நீதியாய் வகைச்சா ரிதுசரி சமனாய்
நிலைதவ றுதிடி லிதற்கு
நிகழ்த்திட நாலுக் கொருவிதங் கரியுப்
பெடுத்துடன் சாரினிற் கரைத்துச்
சேதியாய் பாகந் தெரிந்துட னடுப்பிற்
றீயெரித் ததுஜலஞ் சுண்டச்
செய்கைபாய்ப் பொங்கி வருதலில் லாமற்
சிறுகவே தீயெரித் திடுமே.



சிறுகவே யெரிக்கச் சலமெல்லாம் வற்றிச்
செழிப்பதில் லாமலுங் கட்டுஞ்
சீரலில் லாமற் கசிகச டத்துத்
திறமதாய் வெளுத்துட னிருக்குங்
குருவுட னிதற்கு அரைப்பாக வீதங்
கூட்டிடு வெடியுப்புச் சீனங்
குறைவரா திடினும் அறுவகைச் செயநீர்
குமுறவிட் டாட்டியே மைபோல்
அறுவகை யறியும் அமுரிதா னெனுமே
அறிந்தறி யாமலு மறைத்தார்
அதுமெழு கதுபோல் வருதலி லெடுத்து
அதிதவட் டதுசெய்து ரவியில்
மறப்படா மலுமே கதிரவன் முகத்தில்
வைத்துக்காய்ந் ததையெடுத் தோட்டில்
வகுத்துமே லோடு மூடிமண் சீலை
மறுபடி யொருமுழப் புடமே. (72)

கரியுப்புச் சுண்ணம்.

முழப்புட மதனில் மூட்டுவன் னின்யத்தான்
முனிந்திடா மலும்புட மாறி
முதிர்ந்திடா மலர்ந்து கரியுப்புச் சுண்ணம்
மூவுலகெ லாம்விலை மதிக்கப்
பழமையுப் பறியார் பதனமாய் வைத்துப்
பரிசைவே தைகளுமே யாகும்
பலபல தொழில்கள் நீச்சிலாச் சுண்ணம்
பாரினில் நினைத்தது முடியும்
இழயகல் லுப்பின் கட்டினை விளங்க
யெடுத்துநீ பொடித்தமுன் சாற்றில்
இனமதாய்க் கரைத்து அடுப்பின்மே லேற்றி
யெரித்திட நீரது சுண்டி
பிழைவரு காமற் குழறவுங் காய்ச்சிப்
பின்பதை யாறவைத் திடுவாய்
பெருமைதா னிதற்கு அரைப்பாக வீதம்
பேண்வெடி சீனமுஞ் சேர்த்தே. (73)

விதமறு வகைநீர் விட்டுநீ ராட்டி
வடஜெய நீரதுமூட்டி
விதமெழு கதுபோற் பதங்வர வழித்து
விதமதாய் வட்டுசெய் திடும்பின்
அதமறு பத்துச் சாககதில் மாளும்
அருணனிற் காய்ந்தபின் பதனை
அடக்கியோ டதனில் அநிதவோ டதன்மேல்
ஆக்கினை செய்துமண் சீலை
பதமுழப் புடத்திற் பதியவுந் தாக்கிப்
பகிர்ந்தபின் னதையுமே எடுத்துப்
பாத்திடுங் கல்லுப் பதுமலர்த் ததிதப்
பளிங்குதன் நிறமதாய்ச் சுண்ணஞ்
சுதனருள் தவத்தாற் சுண்ணம்வந் தெய்துஞ்
சுகிர்தபுண் ணியஞ்செய்தோர்க் கெய்துந்
துரோகிக்கு எய்தாப் புத்துப்போர் கெடுதி
சுண்ணமுங் கருப்பா மாமே (74

சுண்ணமென் றதித வகைகளுக் கமரி
தொடுத்துச்சா ரணையது மாறச்
சுத்தமென் றமுத கங்கைநீர் பிடித்துச்
சோதித்துப் பார்க்கவே மஞ்சள்
எண்ணவிந் நீருஞ் சிவந்தகுங் குமம்போல்
இதுவெகு புதுமைகண் டிடவும்
எய்திடும் சரக்கு யாவற்றும் பலித
மிதுநில வாற்சுண்ண மிசையும்
விண்ணம்வா ரது வெகுசாரக் கதுவும்
வேகமாய்க் குருவ காய் விளங்கும்
விசிதகற் பூரச் சுண்ணமென் றருள்
விதுவொரு கட்டியா யெடுத்துப்
பெண்மைவே றில்லை யறுவகை நீரிற்
பெருமையாய்த் தோய்த்துடன் ரவியிற்
பேண்பத்து முறையே அடிக்கடி தோய்த்துப்
பிழைவரா திருமுறை செய்யே. (75



கற்பூரச் சுண்ணம்.

வாருதி சிவக்க வழலையுஞ் சிவக்கும்
மகிமைகற் பூரமுங் கட்டும்
மணிவிளக் கேற்றி யிதனையே கொழுத்த
வழக்கப்போய் தீபத்துக் கேற்கா
காருநீ பூரங் கட்டியே வலுக்குங்
கட்டிதை யெடுத்துப்பின் பாகங்
கலந்திடு மின்னும் வெடியுப்புச் சீனங்
காட்டுதற் கிதுசரி சமனாய்த்
திருமே நற்கல் வத்தினுட் டாக்கிச்
சிதறிடா தறுவகை நீரால்
செய்பத மாக ஆட்டிமை போலுந்
தேன்மெழு கதுபத மெடுத்துப்
பாருவட் டதுவாய்ப் பாகமா யுணர்ந்து
பானுவென் றருணனி லுலர்த்திப்
பாண்டவோ டதனில் வைத்துமே லோடு
பரிவுடன் சீலைமண் ணேழே. (76)

சீலைமண் ணிட்டுப் புடமது கோழி
செழுத்திப்பின் னுறுவு மெடுத்தாற்
திறளிந்த பண்போர் கற்பூரச் சுண்ணஞ்
சித்தர்கள் செய்வது அருமை
வாலையம் பிகைப்பெண் மாதுடன் சிவமும்
மருவினு லிதுசித்தி யாகும்
மறைத்திடும் பூட்டுக் கிதுகற்ப சூஸ்த்ரம்
மவுனமாந் திரவுகோ லமரி
வேல்விழி மாத ராசையின் வலையால்
மிகவுமன் னோர்களின் மயலால்
விந்தழிந் தனந்தம் வேள்வியில் மாண்டு
வியாசரால் உலகம்பா மாச்சு
சாலவுங்கற்ப சாஸ்திரமுந் நூறே
சாட்சியிந் நூலெடுத் துரைக்குஞ்
சகலமுந் தோற்றம் இதற்கெனும் பிறவி
தானுதித் திடுமரி தரிதே. (77)

அறுவகைச் செயநீர்.

அகாரமென் றெழுத்தில் அமுரியுந் தோன்றி
யதனிலிந் துப்புவுந் தோன்றி
அப்புவு மதிற்பஞ் சாட்சாரந்தோன்றி
யஞ்சுரு வறுவகை தோன்றி
மகாரமென் றதீத மாலுமே தோன்றி
மதிநில வுப்பதுங் கங்கை
வகையதை யுரைக்க அறுசுவை யுண்மை
மகிமையைச் சொல்லவு மெளிதோ
நகாரமென் றதனில் மகாரமுங் கூடி
நாதநீர் சரமது தோன்றி
நானிலந் தனிலே நாதவிந் துறைந்து
நடக்கையால் மலசலந் தோன்றி
உகாரமென் றெழுத்தில் உடல்புளி தோன்றி
யுப்பு அப் பதுவினிற் சேர்ந்து
உருவதுவாகி தீட்சையா ருண்டில்
உதகமென் றறுவகை நீரே. (78)

அறுவகைச் செயநீ ரதனையே யுரைக்க
அருளும் பொட் டுப்புடன் சீனம்
அங்கடி யதனில் வெங்கார சாரம்
அதீதமென் றிடும்பூரத் துடனே
மறுமமாய் மறைந்த மலப்புளி துருசு
வருதுமா ருண்டினி லமுரி
மதுவைவிட் டாட்டி மயனமாய் வருதல்
வழித்துடன் மெழுகதின் பதத்தில்
வேறுத்திடா திதனை வெண்டிப் பீங்கானில்
மெழுகதி லாட்டியே பனியில்
வெகுஜலம் பொழியக் கசியநல் வாரம்
மிகவொரு குப்பியிற் றூக்கி
இறுகிடுஞ் சரக்கில் அறுபத்து நாலும்
இந்நீரிற் றோய்த்துடன் ரவியில்
மிகச்சுருக் கிடவுந் தோய்த்துடன் வாரம்
மென்மேலுங் கடுரவி சுருக்கே. (79)



சுருக்கிடு மதுவை ஓட்டினிற் றூக்கிச்
சுருக்கிடச் சிறுகத்தி கமலஞ்
சுருக்கது மேறி வலுத்துக் கட்டிடுமே
சூட்டிடுஞ் சரக்கெல்லாங் கட்டுஞ்
சிறுத்திடுந் தீயிற் கடுகுப்பிர மாணஞ்
செலுத்திட வூசிபோல் புகைந்தால்
ஜெயமிது பற்பஞ் சுண்ணத்துக் கடுக்குஞ்
செந்தூரஞ் சாக்கினி லாகும்
குருத்துட னூசிப் புகையடங் கியதாற்
குறையிலா மாத்திரைக் குளிகை
குவலய மாந்த ரவரவர் பிணிக்குங்
கொடுத்திட நோய்களுந் தீருஞ்
சுரமெழு ஜன்னி தோஷமு மகலுந்
தொடுக்கமாத் திரைகளெதி ரொருவர்
சுத்தபண் டிதனென் றனைவரும் வருகார்
சுண்ணமென் றமுரியின் சுருக்கே. (80)

அமுரிசா தனைசெய் தவனியி லுளவா
தவர்க்குநேர் யாண்டினி லணுகும்
அதற்கதற் கவிழ்த மீரஞ்சு திங்கள்
அருளினோர் முந்நூறென் றறியும்
வமுரியிற் கொள்ள அதன்பிர யோகம்
வச்சிரச் சிப்பித்தோ டண்டம்
வழக்கமோ ராண்டு மாற்றியே மாறில்
வழக்காட்போய் மறுயிரு ஆண்டிற்
குமுரிகல் லானை யண்டக்கல் பற்பங்
குறித்துடன் புளியுணர் வோர்கள்
கொல்லவந் தெமனும் வீழ்வினை பயந்து
கும்பிடு மமுரியின் வேகம்
சமுசய மறியார் எழுத்தறி விளக்கச்
சைகையெல் லாமினி யுரைக்கச்
சனகாதி ரிஷிகள் பதினெண்பேர் திரட்டுந்
தமிழினுற் றிருத்தவு மறியேன். (81)

### பஞ்சபூதச் சரக்குகள்.

திருத்தவைந் துருவும் பிரிதிவு மப்புந்
தேய்வுடன் வாய்வுமா காசந்
திரையகற் றிடவு மண்தண்ணீர் நெருப்பு
சீர்பெருங் காற்றுமே சத்தம்
பொருந்துமிவ் விதமாம் பொன்வெள்ளி செம்பு
புகலிரும் பதுவங்கா ரீயம்
பொருந்துநவ் வெழுத்து மவ்வுசிவ் வெழுத்தும்
புகலும்வவ் வெழுத்துயவ் வெழுத்தாம்
கருத்துநவ் வெழுத்தில் மவ்வெழுத் தனுகும்
கானுமவ் வெழுத்திற்சிவ் வெழுத்துங்
கலந்துபுக் கிடுமால் சிவ்வெழுத் ததனிற்
காத்துவவ் வெழுத்துவந் தனுகும்
அருத்துவவ் வெழுத்தில் யவ்வெழுத் தனுகும்
யவ்வெழுத் ததுசுட ரதனில்
அடர்ந்துபுக் கிடுமால் சுடரது மணியில்
அனுசரித் திடுமது மணியே. (82

### அண்டவுற்பத்தி.

அதுமணி யோடிப் பாத்தினி லனுகும்
அதுபாஞ் சிவத்தினி லனுகும்
அருஞ்சிவ மோடி யண்டத்தி லனுகும்
*அண்டமுந் திரும்பியே பறந்து
இதுவென்ன அண்டந் தப்பம தாயி
யினமறிந் ததுவொரு தானாய்
இசைத்திடுங் குருவாய்த் தசமெனுந் தீட்சை
யிறப்பதும் போய்மறு பிறப்பாய்
விதமெனும் ஸ்தம்ப மதாவிளங் கிடுமாய்
மேலில்லை கீழில்லை விரும்ப
மிகவுமே யானும் இதுபொரு ளறியேன்
மேதினி தனிலொரு வனுமில்லையான்
மதுரசெந் தமிழை யாய்ந்துடன் விளங்க
வாயில்லை நாவில்லை யுணர
மண்ணுள வறியேன் விண்ணுள வறியேன்
மனதறிந் துணரதா விலையே. (83



எனும்பர மதனில் மணியுதித் திடுமாம்
இதுமணி தனிற்பர முதிக்கும்
இனிச்சுடர் வீசி சுடரினில் யகாரம்
யகாரத்தில் வகாரம்வந் துதிக்கும்
மனுமல ராவி வகாரமென் றதனில்
வருகுமே சிகாரம்வந் துதிக்கும்
மருவுமே சிகாரம் அதுதனில் மகார
மதுமுதித் திடுமெனு மாகில்
பனுமலர் பொழியும் மகாரமென் றதனிற்
பகருவோம் நகாரமே யுதிக்கும்
பாமெனும் பூமி யிருந்துரு வாச்சு
பசைந்தமண் ணீருமுண் டாச்சு
மனுக்களிவ் வளவும் மறுபிறப் பறியார்
மாதுபெண் ணுருவினு லுதிக்கும்
வான்புவி யனைத்தும் வந்தவா றதுபோல்
மகிமையென் றதுபடைத் ததுவே. (84

படைத்திட வொழுங்கு மகத்துக்க ளானுக்
பாரினில் ஜீவனெந் துதித்துப்
பராபரை யெனும்பே ரிவ்வள வனந்தம்
பவாயினு லானதிவ் வாயு
விடைத்ததிவ் வாயு சூட்சமே யல்லால்
வேறொன்று மில்லைபார் புவியில்
விந்துநா தாந்த சிரோமய சொரூபம்
விடுத்துல காதித புவனம்
நடைத்ததா னுலகம் யதனப்பா லமுதம்
நாடிக்கா லடியிற்காத் திடவும்
நரகமுஞ் சொர்க்க மிறந்துடன் பிறக்க
நாடினு ளிவனுமிவ் வளவு
உடலுயி ராக வினதுவே யிருந்து
உயிர்க்குயி ராகியே மாது
உற்பவச் செயலா லம்பிகைப் பெண்ணை
யோகிக ளறிந்துமே துதிப்பார். (85

### வாசியோகம்.

துதித்திடும் ராஜ யோகத்தின் சுருதி
சுருக்கமாய்த் தெளிவுட னுரைக்கச்
சூட்சகா ரணத்தைச் சொல்லவு மெளிதோ
சூட்டினார் மகத்துக்கள் மறைவாய்
விதித்திடும் வாசி விளங்கமூ லத்தில்
வெளிவரு காமனு மிருப்ப
மெய்கண்ட தாரை சாதனை மிகவும்
வேறொரு சிந்தையும் நினைக்கா. (85)

உதித்தவங் கென்று உள்ளத்தில் வாசி
யொடுங்கவும் ஊதிடு தாரை
உவாவென்று மாற மையமே சிங்கென்
றுறுத்திப்பார்த் தொருநிலை நிறுத்தி
மதித்துமங் கென்று சுழுத்தியி லேற்றி
வாசியுஞ் சுடரினிற் பாய
மனது சஞ்சலத்தை நீக்கிவை ராச்ய
மவுனமாய்ப் பழக்கஞ்செய் வீரே. (86)

பழக்கஞ்செய் திடுமே சுடர்மணி யேறிப்
பாகமாய்ச் சேர்த்திடு மதுபின்
பாருமிப் படிதான் பழக்கம தாகப்
பதனமிவ் விதவாசி யோகம்
அழைகண்ட தாரை வழிபெருப் பாதை
அம்பிகை கொலுவிருந் தடியில்
ஆதிசத் தியமே அமர்ந்திடு மூலம்
அடிமூல சாதனை யதனிற்
பிழைவருகாமற் புளிகரு நெலலி
பிடித்திடுஞ் சாரை வெண் ணொமரி
பேதமூன் றெழுத்தின் விபரமும் விளங்கப்
பெருமையை யுரைப்பதும் பெரிது
முழக்கமாய் மூன்றின் முதலெழுத் துரைக்க
மூலத்தில் அங்கென்று நாட்டு
முழங்குமே தாரை புளியது வாசி
முதலெழுத் திருக்கருள் வதுவே. (87)



முதலெழுத் துப்பின் நடுவெழுத் தரியு
மூனைந்துமே சிங்கென்று உரை
மூனைசுழி யறியக் கரையெழுத் தரியு
மூட்டிடு மங்கென்று உரைக்க
இதுமறைத் தனர்க ளினிவா சியுமே
எழுத்தறி யாதென்ன பாவம்
என்குரு முனியால் விபரமாய்த் தெரிந்த
தியல்பதை யுரைக்கவு மரிது
அதுவெழுத் தரிய அகரமும் உகாரம்
அதீதமாம் மகாரம்மூன் றெழுத்தும்
அறிவித்த எழுத்தின் விபரத்தை யறிந்து
அடக்கமாய் வாசிகொண் டேதப்
பதம்பெறு மோட்ச பரமகை லாய
பதவிவந் தெய்திடும் பாரு
பாத்திருந்த வாசிப் பழக்கஞ்செய் திடவும்
பழம்பொருள் தானுங்கண் டுணரே. (88)

### கருநாவின் விபரம்.

பொருளிது நாளும் புகலவும் பிரமம்
புளிமூலச் சருவிதா னென்று
புகழ்தரு மாலின் கருவியின் விபரம்
புனலெனு மமரிதா னென்று
இருளது விலகும் எந்தை ருத்திருக்
கிசைந்தமே ருவின்சுட ரொன்று
இருப்பிடங் கண்ட தாரையில் வாசி
யிதுவிளங் கிடுங்கரு வொன்று
அருதிரு வுருவின் கருவிது நாளும்
அடக்கஞ்செய் தனர்பெரி யோர்கள்
அகஸ்திய முனியும் எனக்கிதை யுரைக்க
அடிநடு முடியது வாசி
குருவனுக் கிமகம் அடியனுக் கருளக்
குறையறத் திரையது விலக்கிக்
குச்மசக் கிலாது மகத்துகள் மறைத்த
குருவெனு மறிந்துரைத் திடவே (89)

நிஷ்டை கூடுதல்.

மருத்துக்கள் மறைத்த மவுனப்பூட் டறிந்து
மனவிழி யமுரியே விளங்க
மதிசுழி மேவி மணியினிற் கூட்டி
வாசிகொண் டுதிட வசமாய்
வருத்துச்சோ றழிந்தால் ருசியது போகு
மதியது அழிந்திட லாச்சு
வருந்தியே படிக்க வருவதேன் நாய்க்கு
வசப்படு காதிடிற் றேங்காய்
தொகுத்துட னுடைக்கச் சுளையுண் டாமோ
தொல்லுல கிற்றரோ கியர்க்குச்
சொல்லது பலிக்கா தருமைதா னமுரி
தொடுத்ததாற் சாரையின் நீரைத்
தருத்திடி லெனுமே பலிதம தாமோ
சற்குரு நிஷ்டையில் லாதோர்
சருகிடு மவர்க்கு இடியிடித் தாலென்
தரணியில் மழைபொழி யாதோ. (90)

பொழிந்திடும் மழைதான் பொருத்தமில் லாமற்
புவிதனி லலைந்தலைந் துழல்வார்
புனலதி லண்ட பம்பமில் லாட்டாற்
புகன்றிடுந் தொழில்களும் பொய்யாம்
அழிந்திடா தெதுவும் அண்டத்துள் வழலை
யகப்படா தடிநடு விமண்டும்
அருள்கொடுத் திடுமோ அதிதபூ ரணத்தி
லறிவுட னிருந்துமே பொருந்தி
வழியது மறிந்து வாழ்ந்திட லரியை
வாழ்த்துமூன் முதற்பிறந் தெழுத்து
வருஞ்சுழி நாட்டம் ஐந்தெழுத் ததனில்
வாசியு மெனுமறைப் பொருள்தான்
வெளியென்ன வாசி சுழிமுனை யிதுதான்
விளங்கிடி லறிவதிர தாக
விதமென்ன மதிதான் நடுவணை மூலம்
மிகத்தெரிந் தறிந்ததி லாதே. (91)



ஆசான் தோன்றுதல்.

உதித்திடும் வாகி யூசியின் முனைதான்
ஒளித்தனர் சுழியறி யாமல்
உண்ணாக்கை யறுத்து அலைந்திடுவோர்கள்
ஊணுழ்வழி யறிந்திடு வாரோ
விதிதவ மறியாற் வேட்டைநா யதுபோல்
மிகக்குலைந் தருந்தவ மழிந்தார்
விசிதமூன் றெழுத்தை முன்பின்னாய் மாறி
மெய்ஞ்ஞானச் சுழிதிறந் ததனாற்
கதித்திடுங் கருநீர் காண்பதாற் பிரமை
கருத்தினிற் கசடெலாந் தீருங்
கனகமா மணிசேர் புருவமை யத்துக்
கடவுளின் தரிசனம் பார்க்க
மதித்திடும் பிரபை கனியொளி வீசும்
மணிமுடி சுடரினில் வாசி
மதுரபே ரின்ப மமுதகோ சத்தில்
மகிழ்ந்ததி செயமெனும் புகல்வார் (92)

வார்பசந் ததுமண் நீரைக்காண் கிலுமே
வலுத்திடுங் காயம்வச் சிரமாம்
வதுகனி பழுத்த வாறுபோற் சடலம்
மாகிடு மதிரவி யதனாற்
பாரினில் மாண்பர் பார்க்கதி சயமாம்
பழமது காயது வாகும்
பகருமெண் சாண்வீ டதனில்வீற் றிருக்கும்
பழய்புளி யமுரியென் றறியார்
பேர்பசுந் ததுகண் பிறவிநீ ருதித்த
பிறப்பறி யாமலு பிறந்தார்
பிறவிதா னறிந்தா லறிவிதி லாசான்
பிரித்துரைந் திடுவதுங் கனவிற்
கார்கசிந் ததுமண் நீர்விடுத் ததினாற்
காமுடன் காலுமே யசந்து
கணபிணி சூழ்ந்து நானெனும் வினைக்குக்
கடுகிமாண் டிடுவர்க டானே. (93)

தானெனுங் கற்ப சாதனை யறிந்து
சகலசித் தனைகளு மகற்றிச்
சதுர்மறை யோர்கள் வசனந்தப் பாமற்
சாற்றினுற் சாபம்வந் தெய்தும்
ஆனெனு பல்லும் பகலும்வி டாமல்
அகாரமும உகாரமு மிரண்டும்
ஆண்டது பனிரெண் டளவினிற் சித்தி
அதீதப்வந் தெய்திடு முத்தி
மானெனு முறுதி யொருநிலை யாதல்
வைராக்கிய தாள்முத லளவும்
மாதவம் புரிதா லாண்டினிற் சித்தி
வருமொரு நாள்பிச காமல்
நானெனும் பகலு மிரவது மொருநாள்
நாழிகையெனு மறு பதுக்கும்
நாட்டமாங் கடிகைக் கிதுபிரசித்தி
தன்னெறி யாருளந் தவமே. (94)

தவமி லாவிடில் வைராக்யம் நிலைக்கா
சத்குரு வினைப்பய னதனைச்
சங்கரித் திடுமே சரசமுங் காரந்
தனையன்றி வேறிலை புவியிற்
கவனமாய்ச் சொன்னேன் கன்னரியின் வயிற்றிற்
கருத்தரித் திடும்வகை போலக்
காசினி யோர்கள் கருத்தினி லுதிக்குங்
கதையிது வென்றெண்ண வேண்டாம்
புவனமா நிதம் நிறைந்ததா லொருவன்
பூட்டிது வென்னுறை புகலப்
புனிதமாஞ் ஜெனனம் வைராக்கிய ஞானம்
புகழினைத் திறந்திடு மெவரோ
சவமதாய்ப் போகத் தந்தையின் விதியோ
சடமெடுப் பதுமாய் மதியோ
சாவது மிருக்க வளர்பிறை வருமே
சாட்சியிற் றூலறிந் திடுவே. (95



உலகநூல் படித்தும் பயனதை யறியார்
உண்மையாய் ருசியிட மறியார்
உடற்கரு வறியார் சடத்தினி லிருந்த
உதகமுந் தைலமு மறியார்
பலபல நூலும் படித்துமே யறியார்
பதமெனும் பதமிலா தறியார்
பாதக ரிவர்தா னுலகினிற் பிறந்து
பதார்த்தமென் றறிந்திட னறியார்
அலையிடஞ் சுத்தி வருங்கார சார
அதின்பல மகிமையு மறியார்
அமுரியி லுப்பு அரிந்தறி யார்கள்
அப்புவி லுதித்தவுப் பறியார்
நிலவுசேர் வொளியின் நிராமய மறியாற்
நீந்தியே கரையேற மாட்டார்
நீத்தின மறியா ரிதுவென்ன பாவ
நெஞ்சமே யிவ்வுரை காணே. (96)

அவயோகம்.

காணுமூச் சடக்கி விழியதை யுருட்டிக்
கபாலமுந் திறந்தனர் கோடி
கனத்தவாய் வதனால் குன்மநோ யணுகி
கலங்கினோ ரவரொரு கோடி
தோணுமெய் மறந்து சுழன்றுட னெழும்பி
சொக்கினோ ரவரொரு கோடி
சூலைவாய் வணுகி சுவாலையு மெழுப்பிச்
சுரமதா லிறந்தவர் கோடி
ஊணுமுண் ணாக்கை யண்ணாக்கிற் றூக்கி
யுருண்டவ ரவரொரு கோடி
உயர்ந்துசா ணீளம் முழமது எழும்பி
யுறங்கியே யொடுங்கினோர் கோடி
பேணதி சார பேதிவந் தணுகிப்
பிறவியா லிறந்தனர் கோடி
பெருமையாய்க் கற்ப சாதனை யறியார்
பிராணனு மொழிந்துமாண் டனரே. (97)

இனமறி யாம விருத்தியே வாய்வை
இறந்தவ ரவரொரு கோடி
இனியதம் பனஞ்செய் தெழும்பியே கும்பித்
தேங்கினோ ரவரொரு கோடி.
கனமறி காற்றை நாசியால் விடுத்து
கருதியே யிறந்தனர் கோடி
கண்டுநா சியைவிட் டொன்றுவிட் டொன்று
கலங்கியே மடிந்தனர் கோடி
தினமொரு நாழி வாசிகொண் டேற்றிச்
சிவபுர மேவினோர் கோடி
தெளிந்திடுங் கண்மூக் கெனுமதைப் பொத்தித்
தியங்கினோ ரவரொரு கோடி
தனிபெரு விரலண் ணாக்கதை யேற்றித்
தயங்கினோ ரவரொரு கோடி
சலமதில் மூழ்கிச் சாதனை யதிதச்
சாவுவந் தெய்தினோ ரறிந்தே. (98)

அறிவதிவ் வாறின் கருத்தினை யியம்ப
அவனிமாக் களிற்சில பேர்கள்
அம்புலி தனிலே மறையவுஞ் சூழ்செய்
யதனிலும் பதுங்கினோர் கோடி
சரிந்திடுங் குலையாற் கதலிதான் தவித்துத்
தளர்ந்தது போலவு மயங்கித்
தயங்கினோ ரேங்கித் தரணியிற் சிலபேர்
தாமரை யிலையின் நீர் போலப்
பறந்தது பறந்து பார்வைகண் டதுபோற்
பாருல கதீதமுந் தேடிப்
பட்டபா டிருக்கும் பரீட்சைகண் டறிந்தும்
பரிந்துபட் சணம்பண விலையோ
தெரிந்துமிப் பரீட்சை யுதாரண மனேகந்
தெளிந்தவ ரறிந்துமே செப்பத்
தேறிடும் வாசி யோகத்தின் பெருமை
திருத்தமா யுரைத்திட லாமே. (99)



வாசியோகத்தின் பெருமை.

வாசியோ கத்தின் மகத்துவ முறைக்க
வருக்கமே சகமதின் பிறப்பை
மாத்திரை முப்பத் திரண்டுமே வளமாய்
மாறவுந் தினந்தினம் நிறையாய்
வீசும்பூ ரகத்தி லறுபத்து நாலும்
விளங்கியே மாறிமா றிடவும்
விகற்பய்வந் தணுகா வாசி நின் றுலவும்
மெய்க்குறித் திறவுகோ லறிந்தால்
பாசம்வந் தணுகாக் கும்பகந் தனிலே
பதினாறென் றறிந்துநீ திரும்பும்
பழக்கம தாகும் மகத்துக ளெனக்கு
பரிபூர ணனந்த தீட்சை
பூசித மாகும் வாசிதான் வசியம்
பொருந்திடில் கால்தலை மாறிப்
புனல்சொறிந் திடவுஞ் சுழியது நாடிப்
புகலவுஞ் சூட்சமி தாமே. (100)

மாத்திரை விபரமறிய.

நாடிடு மினிக்கேள் மகராஜ யோகம்
நாட்டுவேன் வைராக்ய ஞானம்
நடத்தையென் றறிய வாசியோ கத்தில்
நற்குறி விளங்கவும் நடத்தை
தேடும்பூ ரகத்தில் முப்பத் திரண்டு
சிவரேச கம்பதி னாறு
தெளிந்தகும் பக்கத்தி லறுபத்து நாலு
திருத்தமாய்த் திருமிவ் விதமாய்க்
கோடுதப் பாமற் சுழிமுனை யிலேக்
குறித்திரு கண்ணது மேலுங்
கும்பியும் வாசி யொளியது வீசங்
குறிப்பதா மொளியினிற் கூடிக்
கூடுமே யிதுதான் மகராஜ யோகம்
கொண்டுமாத் திரைக்கொரு தீட்சை
கோருமே யிதுபார் தலைசுற்றி நொடிக்கக்
குறித்தமாத் திரையுமிவ் வகையே. (101)

5702

இவ்வகை யறிவை ராக்கிய சூஸ்திரம்
  எடுத்துப்பார்த் தருள்வது யோகம்
இதுசுழி நாட்டம் இதுகற்பக் கூறும்
  மெய்திடு மிதுவுமில் லாட்டால்
எவ்விதத் தொழிலு மெய்திடா தெனுமே
  இருகற்ப முணர்ந்துகொள் ளளவும்
இவைராஜ யோக மெடுத்திட லாகும்
  இருகற்ப மிதுவென்ன பிழையோ
செவ்வையா யருள ரசகெந்தி ரெண்டுஞ்
  செப்பவொண் ணாதிதன் செய்கை
சித்தர்கள் மறைப்பு அகாரமோ டுகாரஞ்
  செழித்திடும் பொன்வெள்ளி இதிலே
முவ்வகைப் பொருளால் முடித்திட லாகும்
  மூன்றிரு வாண்டில்மாற் றுறு
முறையிது கருக்க ளறிந்தவன் ஞானி
  மூழ்வினை நம்பிடா தொன்றே. (102)

ஒன்றினி லிரண்டு மூன்றுவந் ததினு
  லொன்றில்நா லானஇவ் வாறு
உட்கரு மூலப் புளியது மமுரி
  யுருவினிற் சுடருங்காற் றிதுவாம்
நின்றல கதித நேர்மைகண் டறிந்து
  நிகழ்த்திணு ரிதைமறை பொருளாய்
நீடுல கனைத்தும் வாழ்வதின் கருவு
  நேர்தெரிந் தனர்கோடா கோடி
மன்றில்நீர் நெருப்பு காற்றது நாலும்
  மாறிட மாத்திரை பிசகாம்
மவுனங்கொண் டுதி தசமது தீட்சை
  வாழ்க்கையிற் ககனமு மாகுங்
குன்றின்மேற் றீப மணிவிளக் கெரியக்
  குவலய மதிதமாஞ் சோதிக்
கொள்கையார் ஞானக் கற்பசா தனைநூல்
  கூர்ந்திடிற் பாகதி முற்றும். (103)



வேறு சந்தம்.

கற்ப சூத்திரங் காணு முதற்காண்டம்
அற்புதமுறை யாகும் நடுக்காண்டம்
விற்ப னங்கள் விளக்குங் கடைக்காண்டம்
தற்ப ரனரு ளாலிதைச் சாற்றினேன்.

முதற்காண்டம் முற்றிற்று.

---

புலஸ்தியர் வாத சூஸ்திரம் 300.

இதில் வைத்திய சூஸ்திரம், வாதசூஸ்திரம் இரண்டும் சேர்ந்திருப்பதுடன் சுண்ணம், செந்தூரம், பற்பம், ஜெயநீர், பதங்கம், கட்டு முதலானவைகள் செய்முறைபாகங்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாய்ச் சொல்லியுள்ள சாஸ்திரம்.

புத்தகம் 1-க்கு விலை அணா 0—12—0.

உ

பரமபதிதுணை.

# புலஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# கற்பம் 300,

## கடுக்காண்டம் 100.

சீரு லாவிய தென்பொதி கையில்வாழ்
*மேரு சூழும கத்தியர் மெய்யருட்
பேரு மும்ஞான கற்பந்த னைப்பேசக்
காரு மங்கரி மாமுகன் காப்பதே.

ஞான கற்பம் நவிலுமுந் நூறையும்
வான வர்புகழ் மாமுனி வோரருட்
பான முண்ணப் பாகதி தந்தரு
ளானை முகனையெந் நாளும றவனே. (2)

சீர ணிந்த செழுஞ்சடை மேவிய
தார ணிப்புவ னும்பிகை பொற்பதம்
வார ணிந்த மதிநதி சூடியக்
கார ணிந்தகங் காளனைப் போற்றுவாம்.

அண்ட பிண்ட மளாவிய வைந்துரு
நின்டி லங்கும் நிராதாரத் துட்பொருள்
குண்ட லீநற் குகனைப் பணிந்துமுன்
விண்ட மாமதி விந்துவைப் போற்றுவாம்.

விந்து நாதம் விளங்கு மகந்தனில்
ஐந்து ருப்படி யாதலா லைம்பொறிச்
சிந்தை வாழ்சிவ யோகிக ளுற்பன
நந்தி பொற்ருள் நலம்பணிந் தோதுவாம். (5)

*மேரு=ஆசவிபீடம் அதாவது பெரியோர்கள் நெய்வார்த்து வேள்விசெய்தலுமான ஓர் அதிசயபீடம் ஆக X அவி X பீடம்.



வாலை குண்டலி வல்லபை யாகிய
மூல வாசி முனைச்சுழி முன்னமே
ஆல முண்ட அரனருள் பெற்றிடக்
காலை யாலை கதிர்மதி காப்பதே. (6)

நூல்.

கதிரொடு யாமதி காரமுஞ் சாரமாய்
அதிவித நாதாந்த அடிநடு மூலமும்
மதிவிந்து கோசம் மருவ்வழி தாரையில்
நதியிருந் தப்புவும் நாடிய நாமமே. (7)

அப்புடன் மால்திரு ஐவகை தீரதாஞ்
செப்பவொண் ணுதிரு மாலுக் கடிமையாம்
ஒப்பனை யுப்புவாற் கற்பமோ ரண்டினில்
எப்படி யாகிலுஞ் செய்கற்ப னையதே. (8)

கற்பனைச் சொற்றவ ருமற் கருதிடில்
அற்பமென் றேற்றி யகற்றிடு வாமலுந்
தற்பரை யாகிய சார மழுரியால்
அப்பனைக் கண்டு அருள் பெற்று லாவுமே. (9)

அருள்பெற்ற விந்த அரியதோர் காரமாய்ப்
பொருள் நில வுப்பைப் புசிக்கப் புசிக்கவும்
இருள்பற் றிருந்தவெண் சாறுட லதனில்
மருள்விட் டகன்று மதிநில வாகுமே. (10)

மதிநிற மாகிய மாமதிச் சாரமே
நிதிமறை நாற்படி நேர்பிச காமலே
துதிசெய் தினஞ்சர மாறித்தொ டுத்திடும்
விதியின் படிவந்து விட்ட குறையிதே. (11)

முதற்றிங்கள்

விட்ட விதிப்படி விந்ததி சாரமே
தொட்டிடும் வித்து தொடுத்தொரு திங்களில்
அட்டுப திங்குண மாறிட மாறிட
எட்டி யபாளன் எதிரி யுதைப்பனே. (12)

எட்டி யபானன் எகிறி புதைப்பதால்
முட்டிமூ லாக்கினி மும்மலச் சூடுதான்
தட்டுமுட் டாகிச்சம் மான னுஞ் சிறிதில்
அட்டியில் லாமல் அதியுஷ்டன மாருமே. (13)

அல்லல் வெம்பல் அடிக்கடி பேதியால்
தொல்லை வாராத் தொடுத்திடுஞ் சாரமுங்
கொல்லும் வாய்வு கோரே மதுவிட
நல்ல தோரொரு வேர்க்கொம்பு நல்கிடே. (14)

இரண்டாந் திங்கள்.

நல்குஞ் சாரம் நமனைக் கெடுத்திடும்
எல்கும் நோய்வினை யேகிடு மாதலால்
ஒல்கும் வோரிரு திங்களி ரண்டினில்
வெல்கும் பானன் விதற்பம் நினைப்பமே. (15)

நினைப்ப தென்னமு லச்சுழி நாபியில்
வினைப்ப யன்மிக வேதனை யாகிடும்
இனைப்ப தித்து இயல்வத னாரியால்
அனைப்பட் தொந்த மடிக்கடி நாறுமே. (16)

மாற மாற மதுபானச் சாரையில்
ஊறும் வாத மடக்கியஞ் சூட்டிடும்
வேறு வாத வினைப்பித்த மோடியே
தேறுஞ் சாரை நீர் சித்திய தாகுமே. (17)

மூன்றாந் திங்கள்.

சித்தி யாதல் திரிமூன்று திங்களில்
எற்றி வாய்வு எகிறியு தைக்குமவ்
வுத்தி சத்தி யுடலாதி நோயதும்
வற்றித் தேகம் வயிறு பொருமலே. (18)

பொரும்ப லாதற் புகைவிழி சூடதாம்
அரும்ப மேகமும் ஆக்கைய ரிப்பதாய்
விரும்பு வாரி விடாமல் டிக்கடி
திரும்பத் திப்பிலி திரிமூன் றயங் கூட்டிடே. (19)



கூட்டும் வாரி குடோரத்தின் வாய்மையால்
ஊட்டும் பித்தமு முஷ்ணமு மேகிடும்
வாட்டுங் கைகால் வலிக்குஞ் சலிக்குமச்
சூட்டினுல் வயிர் துர்ப்பல னுகுமே. (20)

பால னுவந்து பானமே யுண்டிடிற்
கால னோடிக் கடல்புக்கு வானதால்
வாலை சஞ்சீவி வாருதி யாற்சடம்
ஆல கால மமுரிய தாகுமே. (21)

நான்காந் திங்கள்.

தாவி நாலுஞ் சதுர் திங்கள் மாமதி
ஆவி சோர அமுரிய டிக்கடி
மேவி யுண்ண வினைகளு மோடிடும்
பாவி நோய்கள் பகைத்திடும் பாருமே. (22)

பகைக்கும் பானன் சமானன் றனஞ்செயன்
வகைக்கு மூவரு மல்லாதி யங்களால்
திகைக்கு மெண்சாண் திசையெட்டு மோடியே.
நகைக்கும் வாதபித்த சேத்தும நாடியே. (23)

சேத்தும நாடி செழுங்கனல் மீறியே
ஆத்தும மெல்லா மருந்தனை லாகிடும்
மாத்திதற் கில்லை மருந்தே யமுரிதான்
பார்த்தெழு பத்தும் பகையது மாறுமே. (24)

எழுபத் தீராயி ரம்நாம் போடினுற்
பழுவெ லும்பிரு பக்கமு லைத்திடும்
அழுதல் துக்கம் அசைதலு லைந்திடும்
தழுதல் தேகந் தடித்துக் கடுக்குமே. (25)

கடுக்கும் வயிறு கைகாலு லைந்திடும்
வெடுக்க தாய்ச்சட மெய்வாய் வெளுத்திடும்
ஒடுக்கம் நாடி யுடலெங்கு முதலாய்
தொடுக்கும் புண்கள் துயரம்வைப் பார்களே. (26)

துயர மேது தொத்திடுஞ் சாரையால்
வயிர மாகு மதுகடுக் காய்ப்பொடி
சயில வாரிவெண் சாரையே மேல்மருந்
துயிர் பலக்கு முடன்கொள்ளு வோர்களே. (27)

கொண்டு மாறக் குணகுணங் கூறிடில்
கண்ட நோய்கள் கடல்புக்கி ஏகுமாந்
சண்டனேது சடத்தைவிட் டேபிரிந்
தண்ட ரண்டமு மக்கினிப்ர வேசமே. (28)

ஐந்தாந் திங்கள்.

அக்கினி யாலழி யாதுப்ரா ணலயம்
விக்ரம மஞ்சும் விளங்கிய திங்களில்
உக்ர தாது உருகிநீ ராகிடுஞ்
சக்ர வாளமுஞ் சாரைவெண் சாரையே. (29)

சாரா நீரைச் சரமாறி யேற்றிடில்
தாரை கோசந் தடித்துப்புண் ணாகிடும்
மாசு சாரனை மாமதி கொண்டிடில்
ஏரத் தொந்த மெரிப்பந்தங் காணுமே. (30)

எரியுந் தேகமென் சாணுட லாதிதம்
விரியுங் கண்ட மிகவும்புண் ணாகிடும்
துரிய வேகஞ் சுரங்குளிர் கண்டிடும்
நெரியு மேதனு நீர்க்கடுப் பாகுமே. (31)

நீர்க்க டுக்கும் நினைப்புவே றாகிடும்
தூர்க்குந் தூர்ப்பலத் தூக்கம தால்மனம்
வேர்ப்ப பல்பிணி வியானனுந் தானனுங்
கூர்மன் நாகன் குணகுணங் காண்பதே. (32)

காண்ப தேது வியானன் கொடூரமே
சாண்வ யிறுமே தான்விம்மிப் பேதியாம்
வீண்ப தரிலோ வெடித்துஉ டம்பெலாம்
ஊண்பு சிப்பை யுதானனொ ழிக்குமே. (33)



ஒழிக்குங் கூர்ம னுடம்பூதி நித்திரை
விழிக்கு மேவிழி மெய்மறந் தாக்கையுங்
கழிக்கும் நாகன் கனலினால் மெய்க்கனை
முழிக்குந் தேவதத் தன்முன்னந் தானுமே. (34)

தேவ தத்தன் தியக்க மயக்கமாய்
ஆவ லாகிரி யதிதமுண் டாக்கிடும்
பாவ புண்ணியப் பற்றால்ந டப்பதாம்
நாவ தீசர் நடிப்புமுண் டாகுமே. (35)

உண்ட வன்ன முடன்செரி யாமலுங்
கண்ட தாரை கனத்துமே ஊதிடும்
விண்ட பானன் விளங்கிய நீரினிற்
கண்ட திப்பிலி கையான் பொடியதே. (36)

கண்ட திப்பிலி காற்கழஞ் சேபொடி
கொண்டி டுஞ்சமன் கோழைய கற்றிடும்
மண்ட லமதில் வாய்க்கும தற்றுப்பின்
விண்ட பானன் வியாதி விபாமே. (37)

விவர மாமஞ்சு மேவிடு மேல்மருந்
தவறி டாமலுந் தானஞ்சு பட்சமும்
புவியி லோர்க்குப் புகலொரு திங்களில்
தவிக்கு மண்டலம் நற்குறி யாவதே. (38)

நற்று ணை மென்னும் ரத்நாதி கற்பமே
சற்குண மென்னுஞ் சற்புத்ர னாகவுந்
துற்குண மையல் துரோதகை ஆசைவிட்
டெற்குண யோனி யாசையை விட்டிடே. (39)

யோனி யாசை யொழியாத பாவிகள்
மானி லத்தோ ருயிர்மறந் தேகிடுந்
தான ணிமயல் தான்விட் டகற்றியே
தானி ணிச்செயும் ஞானகற் பமிதே. (40)

ஞானி யாவது நற்புத்தி மாந்தரில்
யோனிக் கேணியி லுற்பத்தி யாவராய்
வானு தானு மடந்தைய ராசையில்
தானு மூலத் தவறிடுங் கற்பமே. (41)

தானு மூன்று தனியே தவிப்பார்கள்
பான முண்டு பழக்கந் தவறிடிற்
சோனை யாய்வடிந் தேதுற்ப லங்கொண்டு
மானைப் போல்புவி மாக்கள்மாள் வார்களே (42)

தேகசித்தி.

மனித ராகி வடிவெடுத் தங்கனே
புனித னய்ச்சிவ போதனை பூண்டுபின்
தனிய ஞானத் தவம்பெற் றுலகில்வாழ்
இனிய சாரை யியல்புகண் டோர்களே. (43)

சாரை நாகந் தனையுரு வாக்கிடிற்
பேரை யானருட் பேருல கந்தனில்
நீரை யுண்டு நிரந்தர சொரூபமாய்
வேரை யுண்ட விவேகி யிவர்களே. (44)

வெண்சாரை.

வேக மாகிய வெண்சாரைப் பாம்பினு
போகத் தாசை பொருந்தா திதற்குமுன்
னேக மத்தோ ரமரியாம லாத்மத்தி
ரேக சித்தியாற் சித்தர்க ளாவரே. (45)

ஆறுந்திங்கள்.

தேக சித்தியாந் திங்களோ ராறினில்
நாகப் பாம்பு நடுவெனுஞ் சாரையைத்
தோகைப் பாலெனுஞ் சோமப்பால் வாரிதான்
காமப் பாலுண்ட கருத்தை யழிக்குமே. (46)

கருவியாற் பானங் காலாகா லங்களுங்
குருவா யனுதினங் கொண்டுடன் சாரணை
வருவ தோர்பான மாறச் சரமாறி
கருவா யனலினுற் சுரம்வந்த னுகுமே. (47)



அனுகு மூலத்தி லனுசரிப் பதுவெனுங்
குணமுந் திரிகான் கூடப்பொ ருந்திடில்
மணங்க லந்தம லமிக வாகிடும்
நிணமும் வைத்துநீர் நெஞ்சுபுண் ணாகுமே. (48)

வேறு.

நெஞ்சு முணர்ந்து நெறிதவறி
நீருய் வெதுப்பும் வேர்வையுடன்
பஞ்ச தேபோற் கைகாலும்
பதறி நடப்ப துந்துறையும்
வெஞ்சொற் றவறி மதிமயக்கும்
விக்கல் கக்கல் விதவிதமாய்
தஞ்சு ணர்வோர் பரிட்சையெனும்
தளிர்வாங் குளிர்சுர மதுகாணே. (49)

காணு மடிக்கடி பலபேதி
கடுதாய்ச் சுரந்து வயிறாதும்
வீணுக் கேமுன் வினைப்பயனும்
விதியா யெழும்பு மதியதனல்
ஆணைய்ப் பிறப்போ ரிக்குறிகள்
அமுறி யதனு லதீதமுறுந்
தாணைய்த் தொடுக்கச் சரமாறிச்
சுகமாய்க் கொள்வீர் சாரணையே. (50)

சுகமாய்க் கொள்வீர் பானமதிர்
சுறுக்காய் மிளகு திப்பிலியும்
அகமாய் வேர்க்கொம் பதுமூன்றும்
அனலில் வெதுப்பிச் சரிசமமாய்த்
தருமாம் பொடியாய்ச் சூரணித்துச்
சரர நீரி லுடன்கொள்ள
உகையாய்ப் பட்ச முடனறுத்து
ஓகோ பிணிக ளோடிடுமே. (51)

பச்ச முணரப் பலநோய்கள்
பறந்தே உடல்விட் டகன்றிடுமாம்
நச்சத் தரவின் பாலுணர
நமனோ டும்வினை நாடாது,
நிச்சய மிந்நா ளிரத்தினமாம்
நிகழ்ந்து முந்நா ளுய்ந்திடிலோ
அச்ச மில்லா வாழ்வுமிகும்
ஆறு திங்க ளதிசயமே. (52)

ஏழாந்திங்கள்.

திங்க ளேழிற் சாரணைதான்
திருத்த மாமதி சரமாறி
மங்கையர் மீதில் நினைப்பாகா
மதிப்பா லுணர்ந்து மகிழ்வீரால்
அங்க மதனில் மூலாக்கினி
அனல்கொண் டெழுப்பி ஆகாசம்
பங்கப் படுத்துந் தசவாய்வும்
படுக்கையில் முடக்கும் பலவினையே. (53)

வினைநோய்ப் பிணிகள் மிசமீறி
வெடுக்கென் றனல்கொண் டருப்பாகி
சுனை நீ ரரிவி மதிபெருகித்
தொடுக்கச் சரமா றிக்கலைக்குஞ்
சயமுங் காச முறுங்கபமுந்
தானே கோழை வருவதுமாய்த்
தயங்குந் தெரியச் சர்வாங்கந்
தணலாஞ் சுரந்த லைப்படுமே. (54

தலைநோய் சிரசிற் சடசடெனச்
சரமாய்த் தொடுக்கு மிடிமுழக்கம்
வலிவாய் மயக்கும் வயிற்நோகும்
வாய்நா ளிரண்டுந் தான்பிடிக்கும்
கலையா மனது முறுதியிரா
கைகால் கடுக்கும் கண்கூசும்
நிலையாய்க் குலைநோ யடிக்கடிதான்
நினைவா யிருந்து நிகழ்த்திடுமே. (55)



நினைவா யமுரி தினந்தோறும்
நிலப்பனை யதுவின் கிழங்குலர்த்தி
இனமாஞ் சுக்கு மிளகுடனே
இதுமாய் மூன்றும் சரிசமனாய்
இனமா யிடித்துச் சூரணித்து
இச்சூ ரணத்திற் கழஞ்சிடையாய்
நினைவா யமுரி தனிற்கொள்ள
நீழ்கடல் புக்கிடு மப்பிணியே. (56)

பிணியா வதுவே திவினைதான்
பிரியா துடலிற் பிறவியதாஞ்
சனியா வதுவுஞ் சடமதனில்
தனக்குத் தானாய்ச் சஞ்சலங்கள்
அனியா யமதா யவதரிக்கும்
அமுரியி னலைகடல் புக்கும்
பணியா வதுமே கார்மேகம்
பறக்கு மதுபோற் பாரீரே. (57)

எட்டாந் திங்கள்.

பாரீ ரெட்டாந் திங்களிலே
படுக்கு முடக்கு மாயிருக்கும்
வாரீர் வாயு வாதபித்தம்
வைராக் கியங்கொண் டம்மூலம்
தேரீர் திடுக்கிட் டதுவிழிகள்
திசையுங் கலங்கித் தியக்கமுறுங்
கூரீர் மந்த நித்திரையாற்
குறிப்பாய் மயக்கக் குணமீதுவே. (58)

இதுவே யினிதா னறிவாகும்
இளைப்பா மசதி யிளமசக்கைப்
பதியேழ் பதினா யிரநரம்பும்
பசுமை நிறங்கொண் டதீதமுமாய்
மெதுவாய் நடக்கு மிடுப்புளையும்
வெறிகொண் டவர்போல் விழவாகும்
அதுவாய்க் குரல்மெது வாகிவிடும்
அனல்கொண் டெரியும் மறிவீரே. (59)

### அதிமதுர அமுரிகற்பம்.

அனல்கொண் டதுதான் அகலவுமே
  அதிமது ரத்தொடு வேர்க்கொம்பும்
கனலோ டிடவு மிளகரத்தை
  கருதி விடுசரி சமன்கூட்டிப்
புனல்சூழ்ந் திடவே வறுத்திடித்துப்
  பொடியாய்ச் சூரணம் புகல்வீராய்
இனமா யமுரி பின்னீரில்
  எடுத்துக் காற்கழஞ் சிடுவீரே. (60)

இடுவா யமுரி தனிலுண்ண
  இருவினை யாலெய் திடும்நோய்கள்
நடுவினை யாலன் னசித்தோடும்
  நமனுங் கருதி நடுங்கிடுவான்
படும்பா டதிசய விதமறியாப்
  பகர்வாய்ப் பாணஞ் சரமாறி
விடுவாய் மதிசர பாணமதால்
  விதியை வெல்லுமிவ் வஸ்திரமே. (61)

வெல்லு மமுரிபஞ் சாக்ஷரமே
  மிகவு மேன்மருந் ததுவூட்ட
வெல்லுந் தானு மதைக்கொண்டார்
  விதமாந் தோஷ முனக்கேது
அல்லும் பகலும்வி டாமலுமே
  அமுர்தசஞ் சீவி அஸ்திரத்தால்
மல்லுந் தியமாய் நடுவினையை
  மாறிட மாறிட ஜெயமாமே. (62)

### அமுரியின் பெருமை.

செயமா யமுரி தெளிந்திடலாந்
  திறமாய்ச் சடலஞ் சித்தியதாஞ்
சயமுங் காசமும் வாதபித்தந்
  தானே பறக்குஞ் சிலேற்பனமும்



மயகா மியமத மாச்சரியம்
  மதிநீ ரதுசஞ் சீவியுணர்
பயமுங் கிலேசமு மேகிடுமே
  பாரீர் மகத்துவம் பண்போரே. (63)

பாரா மலுமே பாடுபடாப்
  பலவாய் மொழிகள் படித்துலகிற்
தேறா மலுமே சிலநூல்கள்
  தெளிந்தா ரதுபோற் றெளிந்தவர்போல்
தோரா மலுமே வாய்ஞானந்
  தொடுத்தே தொடுப்பார் சாமாறிக்
கூறா ததுநூல் குவலயத்திற்
  குருநூல் போலக் கூறுதே. (64)

குருநூ லிதுவாம் முந்நூறுங்
  கொடுக்கார் கோடி தனமீய்ந்தும்
அருள்பெற் றமிசை மதுவிருந்தால்
  அமைப்பா லமைக்கு மருட்பொருளும்
இருளும் விலகு மிராப்பகலா
  மிறப்பும் பிறப்பு முடன்போச்சு
மருவுந் தீக்ஷை கங்கைதனை
  மதியா லறிந்து மகிழ்வீரே. (65)

மதிசந் திரபுஷ் கரணியதை
  மறைத்தார் பெரியோர் மகத்துக்கள்
விதியா லதுமதி யறியாட்டால்
  வெறென் றறியார் புவிமீதில்
துதியால் ஞானச் சுகாதிதமாஞ்
  சுயம்பிர காசச் சுடர்மணியே
நிதியாய் விளங்கும் நதியறிந்து
  நீந்திக் கரையேற மாட்டாரே. (66)

அறியா ரரவ மதின்விடமே
    அரனுண் டமுத மறியாமற்
பரியா சமதா புலகோர்கள்
    படிப்பார் வெகுநூல் பரிபாஷை.
வெறியாய்ப் புராணம் வெகுவாஞ்சை
    விதியாம் விவர மலைவதுமாய்க்
குறியா ரறிவ ரறியாமற்
    குருநூ லறிந்தாற் குருவாமே. (67)

ஒன்பதாந் திங்கள்.

குருவா யமைத்திடும் ஞானகற்பங்
    கூறூர் குவலயத் தோர்களுக்கு
ஒருவா யொன்பது திங்களினில்
    உளைக்கும் வயிறுநோ யுடல்பெருத்துக்
கருவாய் மலர்ந்து கனத்துடலுங்
    கமல மலர்ப்பூ தியல்பாகிப்
பெருவாய் மலர்ந்து தானிருக்கும்
    பிராண வாய்வதைப் பேசுவமே. (68)

பேசார் பெரியோ ரிதன்பெருமை
    பிராண வாயு வெழுந்தோங்கி
ஆசா னதுபோ லடிவயிற்றில்
    அரண்டு உருண்டு திடுதிடென
மாசாந் தரமொன் பதுமாச்சு
    மார்நோய் காணு முடன்வாந்தி
நேசா தேசப் பிராணனுமே
    நெடிய வுதைத்து நெகிழ்ந்திடுமே. (69)

அபாய மெனுமனு காதுடலில்
    அனல் கொண்டக்கினி சிரமேவி
உபாயத் துடனிரு கன்னமது
    உளைக்கு மிடிக்குங் கடுக்குமப்பாற்
சிவய நமவெனு மூயிராகிச்
    செழித்து வலுத்துடன் பரமாயித்
தவமாய்த் தவப்பய னிட்டேறுஞ்
    சண்டனு மனுகா வுடலாச்சே. (70)



சண்டனு மனுகா னுடலுயிர்க் காயஞ்
    சரிவா வலுத்துப்பின் பொல்லாத்
தையலர் மாய்கை நிதம்பத்தி னுசை
    தவறுண்டு தானது போச்சு
அண்டபிண் டமதா முடலின் கருவிகள்
    அனைத்தும்வச் சிரமதாம் வலுவாய்
அறிபுவி யாசை யதனைவிட் டொழித்து
    ஆண்டொன்றிற் சிறுபிள்ளை யாகி
எண்டிசை யனைத்துங் கீர்த்திபெற் றியல்பாய்
    எழுபத்தி ராயிர நாம்பும்
ஆறுமுக மெழுவங் வயமதுக் கதிதம்
    இலக்கமே உறுதியா மிந்த
மண்டலந் தனிலே மனுக்களும் வணங்க
    மாற்றிய தேகம்வே றூச்சு
மகத்துவ மாச்சு நிரந்தர ரூபம்
    மனிதரில் தேவனு மாச்சே. (71)

நிரந்தர ஞானந் தானது வாச்சு
    திருவிகற் பம்மிகப் பெருமை
நேர்மையோ ராண்டிற் பூருவக் ஞானம்
    நிலைத்துமெய்ஞ் ஞானமும் வலுத்தும்
பரஞ்சோதி வாலை கிருபையி னருளாற்
    பற்பல பிணிகளும் போச்சு
பசும்பொனின் நிறமாய்ச் சூட்சம தேக
    பாலனுய்ப் பிறந்துபா ரதனில்
வருமுத்தி யீசன் அருள்நின் றிலங்கும்
    மதியெனு மழரியாற் காயம்
வளர்பல முற்று இரவியின் ஒளியாய்
    வர்ணமுண் டாகிமென் மேலாம்
இருளது விலகி பிறப்பிறப் பற்று
    ஈஸ்வர னெனும்பிறப் பாகி
இருவினை யொழிந்து இருப்பரெந் நாளும்
    இனியபத் தியமதை யுணர்வாம். (72)

இனியபத் தியமாஞ் சிறுவர்க ளமுரி
ஈரெட்டுப் படியதாங் கணக்காய்
இசையநற் பாண்ட மதனில்விட் டதிலே
இணையிலாக் கற்சுண்ணம் நீறும்
தனியெட்டுப் படிகொண் டமுரியிற் றுக்கிச்
சங்கையில் லாமலே கரைத்துத்
தனியவைத் ததனை மூன்றுநாள் ரவியிற்
றரணிமா னிடர்களு மறியாப்
பனிரவி காற்றும் வனிதயர் நிழலும்
படாமலி ரகசிய மாகப்
பாகமாய்ச் சதுர்நாள் பாண்டமாஞ் சில்லு
பதித்தபின் தெளிந்தநீர் வாங்கி
வினயமாய்ப் பாண்ட மதனில்நீ யூற்றி
விபரமா யடுப்பினி லேற்றி
மிகவுட னனல்கொண் டக்கினி வீச
மிதமதாய்த் தியெரித் திடுவாய் (73)

எரித்திடு மனல்கொண் டிடைவிடா தெரிக்க
இரைச்சலிட் டதுநுரை யெழும்பும்
இனியநீர் சுண்ட யாவரு மறியா
தென்னையை எடுத்துவிட் டினிக்கேள்
குருவைநீ பணிந்து குறித்துடன் பதமாய்க்
குருமுனி கிருபையி னருளாற்
குறையேதும் வாராச் சாரநீர்க் கங்கை
குணுகுணங் களையுரைத் திடவுந்
துரிதமா யமுரி சலமெனு மயமாய்ச்
சுடரதின் நாவினால் வலுத்துத்
துய்யவெண் ணிறமாய் நந்தியுப் பெனவே
சொல்லவும் பலபேர்க ளறியாக்
கரியலிந் துப்பின் மகிமைகற் பத்துக்
காமனுப் பானமாங் காரங்
கணக்குடன் சொல்வேன் கரியுப்பு ஆகி
கருதிய பிறவிமூன் றுமே. (74)



பிறவியின் வாழ்க்கை வாருதி யுப்பாற்
பின்புதான் கறியுப்புண் டாச்சு
பெலத்துப்பின் னதனால் அமுரியுப் பாச்சு
பிசகிலா மற்பாண்ட மதனில்
இரவியுப் பியந்து இறக்கியே வைத்து
இயல்பதாய்க் குப்பியி லிட்டு
இனியதோர் பாக மடிக்கடி யினங்கொள்
இந்நாள்முத லீரஞ்சு ஆண்டு
மறலிமாண் டிடுவான் வினைகளு மொழியும்
வலுத்திடுங் காயமும் வைரம்
மாய்கைவிட் டகல இருவினை பிரிய
வகையந்தப் படியறிந் துணர்வாய்
பனையெனும் வாலை ஏகவல் ததனாற்
பத்திய மதுபகர் வதைக்கேள்
பாசியின் பருப்பு கருக்குரு வரிசி
பசுவின்பா லுடன்நெய்யென் றென்னே. (75)

என்னவே மிளகா யினியசீ ரகமாம்
இன்னமுங் கரியவேம் பதுவாம்
இணையிலாக் கொடுக்காப் புளியது நலமே
இசைந்தபத் தியத்துக்கீ தாகும்
இன்னவை யாகா திறைச்சிமீன் கீரை
இகழ்ச்சியாந் தாம்பூலஞ் சுண்ணம்
இலைகறி காய்கள் வஸ்துகஞ் சாவும்
இலகிய பனையதின் பாலும்
மின்னிடுந் தென்னை விருட்சத்தின் பாலும்
மிகுநடை பனிமழை வெயிலும்
விளங்குகூடக் குரலும் நித்திரை கொளலும்
வேண்டுபெண் ணுசையு மகற்றி
அன்னவை யோடு நல்லெண்ணெய் விடமாம்
அணுகினால் மானம்வந் தமையும்
அகத்திய ருரைத்த அனுபவ மிதுதான்
அடக்கமா யிருப்பது நலமே. (76)

இருப்பதென் றூலு மிடம்பொருளேவ
லியல்புட னொருவேளை யன்னம்
இகவிலா வின்பால் கிடையாமற் போனால்
எண்டிசை தனில்வன மேயும்
விருப்பமாய் வெள்ளை யாட்டின்பா லதுவாம்
மேதினி தனிற்கொடுக் காயின்
விபரமாம் புளியா மதுகிடை யாட்டால்
விசிதமாய் புளியிலைத் துளிராம்
அருப்பது மீறும் அதிதமாம் பித்தம்
அசடதாம் புகையிலை யகற்று
அதுஉள்ள அளவும் எரிதலுண் டாக்கும்
அநேகநோ யமைத்திடும் அறிவாய்
வருத்தும்பல் பிணிகள் இறைச்சியுண் டுணர்ந்தால்
வாயுவால் வதையுருங் கடுப்பாம்
மச்சமுண் டுணர்ந்தால் வயிர்வலி குன்மம்
வருமின்னுஞ் சூலையின் னரிப்பே. (77)

அரிப்பதுண் டாகும் அதிதவுஷ் ணமுமாம்
அனலினால் விறுவிறுப் பதுவாம்
அகற்றிடு மிளகா யறுபவித் துணர்ந்தால்
அதிகவா தங்கள் வயிறுநோய்
வரிப்படும் பிராணன் வலுக்குஞ்சீ தளமாம்
மறுகிடுஞ் சுரமெனுந் தோஷம்
வஸ்துவை யுணர்ந்தால் மூலச்சூ டதிதம்
மலத்தினிற் கிராணியுண் டாக்கும்
பிரிந்திடுஞ் சிலேத்மம் பனையதின் பாலாற்
பிணையதாங் கால்கர முடக்கும்
பேசுவோ மிருமல் அதிதமுண் டாக்கும்
பிராணனை வதைத்திடும் பலமாய்க்
கரிந்திடுந் தென்னை விருட்சத்தின் பாலைக்
கருதினாற் சோகையும் பாண்டுங்
கனத்திடுந் தேகம் வெளுத்திடுங் கொடிய
கனலின்வெஞ் சுரமுமுண் டாமே. (78)



கனலது மீறும் பாக்குவெற் றிலையும்
கற்சுண்ண மிவையனு பவித்தாற்
கண்டத்திற் கோழை சிலேத்மமுண் டாக்குங்
கடைவாயின் பற்கள்வே ரகலும்
புனலும்வே றுகுந் தனுவெனுங் கோசம்
பொரியுமுண் டாக்கும்நீர் கடுக்கும்
புதுமையாய்ச் சுக்கான் கல்கொண் டடைக்கும்
பொல்லாத்தி பனத்தையு மடைக்கும்
நினைவ்வே றூறும் பிணியுணர்ந் தாக்கால்
நிணமெலா முதிர நீ ராக்கும்
நிகரிலாப் பேதி யனுதின மிகவும்
நேர்நிலை வேருகும் நிசமாம்
வனிதய ராசை மயலையுண் டாக்கும்
வயிறு கடுத்தலு முஷ்ணம்
மாரியில் நடந்தால் கொடுமையாஞ் சுரமும்
வந்துடன் லபித்திடுங் காணே. (79)

லபித்திடும் ரவியில் நடப்பதும் நடந்தால்
நாவினில் வரட்சியுண் டாக்கும்
நமையது மதிகம் வேர்வையுண் டாதல்
தன்விழி சீதமும் பாழாஞ்
சபித்திடுந் தாபம் மோகம்வந் தணுகுந்
தணலினாற் கோரமாஞ் சுரமுஞ்
சங்கையுண் டாதல் தலையிடி யிடிக்குந்
தாதுவிற் சுவாலையு மதிகங்
கபமது வழங்குங் காற்றினிற் கதித்தாற்
கருவிக ளாந்தொண் ணூற்றாறும்
கால்கர மசதி உதிரஞ்சுண் டிடுதல்
கல்லடைப் பதுவும்நீர் கடுக்குஞ்
செபித்திடும் பிணிவந் தடுக்குமா ரோசிகந்
தினந்தினம் வெள்ளையோக் காளந்
தேகத்திற் றுடைச்சல் நாசிநீர்ப் பாய்ச்சற்
செலதோஷஞ் சிரசிலுண் டாமே. (80)

கற்பமுண்ணு நாள்.

வேறு.

உண்டுணர்வ தாகியுல கந்தனி லுயர்ந்த
கண்டுமது சாரையெனுங் கற்பமுண் ணு வீரேற்
பண்டியல்மு தற்பிறையாம் பௌர்ணமியின் நாளில்
உண்டுமூன் ருமபிறையி லுன்னதம தாமே. (81)

உன்னித மறிந்தமுரி உற்பனம தாகில்
இன்னித மிகுத்ததொழி லின்பெருமை காண்கில்
அன்னிய நிமித்தமது யாரறிவார் சித்தர்
வன்னிமதி கற்பமுணர் வாலைவய தாமே. (82)

மாறு அபி ராமியருள் மலர்க்கமல மீதிற்
சாறுவயி ராக்கியசுழி சந்நிதியின் மூலம்
வேதமெனுஞ் சுத்தாகாச மாமதியின் சூட்சம்
பேதமற விந்தநித பிரபலம தாமே. (83)

விந்தநித வாருதியில் மேருவெனுஞ் சாரல்
அந்தபதி சாகர மடுத்தகரை யோரம்
வந்தநர நீரிலுமை மானகரிற் சோணர்
அந்தணரின் முத்துணர்வ தாகிலது வாமே. (84)

முத்துகளில் ரத்னவகை முப்பொழுது முணர்வார்
மூத்தொழில்க டுத்ததிரு முத்திதனை வாரிச்
சுத்தமதி பாரைகள்தொ டுத்தகட லுள்ளின்
உத்தமரி சைந்துலகி லுத்தமமென் பாரே. (85)

உத்தமக டற்குருவின் உங்கதனைக் கொள்ளல்
இத்திசையிற் பண்டிதர்க் கிசைந்தவிழ்த மென்க
மத்துவர்கள் வாதியெனு மானிடர்க்காய் நீருள்
வைத்தபொரு ளீசனு மமைத்தபொரு ளாமே. (86)

பொருளுறுங்கல் லுப்பறியப் பொன்மகமே ராகும்
உருவதீதத் தின்பெருமை யுணர்வதெளி தல்ல
பருவமணி கடலுனெடை பாகமெனுஞ் செய்கை
மருமதிய மமுரிபடி வகையது காணுரே. (87)



படியமுரி நான்கையொரு பாண்டமதி லிட்டு
படியெனும்பூ நீரிலதைப் படியுடனே தாக்கி
வடியமறு பதுகடிகை யதுவமுரி தெளிய
மடியதில வுப்பதனை மதியிலிடு வாயே. (88)

மதியிலிடு வன்னியொரு வகையதுவின் கம்பால்
அதிதவித பெரியவனல் அமுரியது சுண்ட
விதியிதெனும் வாறுமிக விப்படிச்செய் வீரேல்
நிதியகடல் வாரியுவர் நீங்குதலை யாமே (89)

உவரதுகற் பாரைநில வுப்பதிக சுத்தி
எவருமறி யாமலுமீ ரைந்துதரந் தீட்சைக்
கவரதித கோடிகணக் கில்லைகட லுப்பிற்
சவகமன வெழுந்துமுயிர் தானது விளம்பே. (90)

விளம்புசெய நீருவெடி யுப்புஒரு சேரு
வளம்பெறப்பூ நீருவகைக் கொருகழஞ்சு சேரு
இளம்பெறவெண் காரமது சேரதுவு மாகும்
இளம்படிகஞ் சேருமிகு சாரமது சேரே. (91)

சாரமது வோடிது வகைக்குச்சம னுகுங்
கூறரிய நாலுவகை குளிக்கல்லிற் றூக்கி
ஆறறிய தாகவதி யமுரியத னுலே
வீரமதை முத்தினம்வி டாமலுட னட்டே. (92)

விடாமலதி லிட்டுமெழு காம்பதம தாகில்
உடாமலும் வழித்துணர்வீ ருகலையது வாகப்
படாமலுடன் சேருவகைப் பாகமது நாலாய்ச்
சுடாகமெனும் பில்லையது சூட்டிடுமி தாமே. (93)

சூட்டிரவி தன்னில்மிகச் சூடுபட வாட்டிக்
காட்டிக்கன லேறித்தழற் காய்ந்ததன்பின் னேட்டில்
வாட்டியடி மேலுமுற வாகவும் பதித்துக்
கூட்டியமண் சீலையது குக்குடம தாமே. (94)

குக்குடம தாகவகை கொண்டுபுட மாறி
விக்கிரமெனும் பில்லையது வெவ்வே றதாக
உக்கிரமுடன் குக்குடத்தி லொன்றது செய்வாகிற்
தக்கியமெ டுத்ததனைச் சாற்றிடலு மென்றே. (95)

சாற்றிய குழிக்கல்லிற் றனதனைத் தாக்கி
மாற்றிடவ ரைத்துப்பொடி மயனமதாய்ச் செய்து
பேர்த்திடும்பீங் கானிலுடன் பின்பதனை பூட்டி
பார்த்துநீ வைத்தனைப் பக்குவமா யாக்கே. (96)

பக்குவமெ னும்பனியிற் பாகமது வாக
இக்கனிய சுண்ணமிது இப்படியீ ரைந்தும்
வைக்கச்செய நீருமதன் வேகமதே வேகம்
புக்கிடத் தினந்தினம் புகழ்ந்துசலம் வாங்கே. (97)

வாங்குசெய நீருவள மாகுமொரு குப்பிப்
பாங்குபெற வேயதனைப் பக்குவம தாக்கிச்
சாங்கமது பாரை நில வுப்பதனைக் கொண்டு
தேங்குழிக் கல்லிலொரு சேரதுவும் ஊட்டே. (98)

சேரதனை யூட்டிச்செய நீரதுவுந் தாக்கிக்
கூடொருநா ளாட்டிடக் குறித்தமெழு காறை
பேரிதனைக் கொண்டுமிகப் பில்லையது வாக்கி
நாரியரின் நிழலனுகா ரவிமுகத்தி லாட்டே. (99)

முகவருன் பணியரவி முகத்திற்றழல் சொரியப்
புகழுங்கதிர் முகவசியம் பூட்டியெழு வாரம்
மிகசதிரோ டதனிலுறு மேஷம்வருங் காலம்
விகடமனு காமலும்வி திப்படியே தாக்கே. (100)

விதிப்படிமே லோடுறமென் மேலுமதை மூடி
நிதிப்படிமண் சீலையது நேர்மைமிக வாக
மதிப்படி திருத்தியதன் வாய்ப்படிய மூதி
முதிர்ப்படிமு னைதவறி டாமுன்னதை வாங்கே. (101)



89

வாங்கிடுநீ யிந்தவிதம் போல்மற்ற மருந்தைத்
தூங்கிவிடு காமலுநற் சுத்தசலப் பனியிற்
பாங்குபெறு மச்சலத்தைப் பாய்ச்சிவிடு பீங்கான்
நீங்கிவிடு காமல்நில வுப்பதின்நீ ரூட்டே. (102)

ஊட்டிவிடு நீரதனி லுப்பதனின் சுண்ணங்
காட்டிவிடு மன்பெருகல் லுப்பதின்கு ழம்பை
நாட்டிலறி யார்கள்சிவ ஞானியரின் கூர்மைப்
பாட்டிலறி யாமற்பறைப் பாரையுப்புன் னதமே. ()

உன்னத முறைந்துகன லோடியனற் றூவி
கன்னியபி ராமியருள் கற்பனையி னலும்
இன்னீர்சல மாமதியி லைந்துஅரை நாட்டி
சென்னியனல் மீதிலிதைச் சிந்தித்தருள் வாயே. ()

சிந்தையனு காதுசிவ காமியருட் பாதம்
வந்துதொழு தேபணிய மண்டலமண் மீதிற்
கண்டுதினம் பூசிக்கனி வர்க்கமறு சுவையும்
மண்டலம்வைத் தேயுணரும் வஸ்துவிது வாமே()

கல்லுப்பு.

வைத்திடுபீங் கானதனில் வானுசல நீர்மேற்
சித்திரக்கல் லுப்பதுவின் செய்கைதனைக் காண்கில்
மூத்துவின்றன் சுத்தவெளிர் வைத்துபனி நீர்மேற்
கர்த்தன்நட னம்புரியங் கல்லுப்பிது வாமே. (106)

கல்லுப்பது பாரைநருக் கண்டனர்கள் வாதி
அல்லும்பக லும்ஒருவ ருருகிலனு காமல்
நல்லசல மேற்பட்ட நன்மலர்ப்பூஞ் சூட்சந்
தொல்லைவினை யாதிதமுஞ் சூழ்வதிலை யென்றே. ()

சூழுமகிப் பாரையது சுத்தபனி நீர்மேல்
வாழுமொரு மண்டல மதிற்படிகம் போலாம்
நீழுலகெ லாம்புகழும் நேர்மைநில வுப்பாந்
தாழுதலில் லாமற்தக டாய்விளையும் பாரே. (108)

விலையுந்தக டாதிதம் வெள்ளப்பிரகம் போலாங்
கலையதீதம் பதினாறுங் காந்மதி சூழுங்
குலையெனவுங் குப்பிதனிற் கொண்டதனைத் தாக்கி
மூளையெனவுஞ் சூட்டிமிக முத்தமதில் வையே. (

மதிபெருகிக் கதியடைய மகிழ்விதமெய்ஞ் ஞானம்
விதியினமைப் பதுவிசித விந்துமதி சாரம்
விதியைமறைத் தேயமுதம் விளங்குஞ்சுழி மீதிற்
பதியமலர் சூடியருட் பானமது செய்யே. (110)

செய்துவர முன்செய்திடு தீவினைகள் போகும்
மெய்யது விளங்கியுன்றன் மேனியும்பொன் னாகும்
ஐயமில்லை நடுக்காண்ட மதினுருதி பாரு
கைபாகங் குருமுடித்த கடைக்காண் டமிதாமே (1

கடைக்காண்டம் நூற்றினிலே கருவிபார்த்தோ னுஞ்
சடைக்காமலே நூலதனை தான்வைத்து நீ பார்த்தால்
மடைதிறந்த வெள்ளமது வந்ததுபோல் யோகந்
தடையிலாதே யாகுமது தன்மையிது முற்றே. (112)

நடுக்காண்டம்.

முற்றுப்பெற்றது.

---



உ

பரமபதிதுணை.

## புலஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# கற்பம் 300.

### கடைக்காண்டம் 100.

முத்திதரும் ஞானவழி மூலச்சுழி மீதிற்
சத்தியபி ராமியுயர் சதுர்க்கமல பீடஞ்
சித்தியருள் பெற்றிடுநற் சித்திரமணி வாயல்
நித்தமலர் பொழியிரவி நிர்மலமுங் காப்பாம். (1)

நிருமலநி ரந்தாநி ராதாம ரூபி
கருமவினை யுற்பவித்த காமிதவி ரோதி
வருமவுவ ரதுகடலில் வாருதியி னாலும்
மருமமதி சூழுமணி மருடமலர் காப்பாம். (2)

வேறு சந்தம்.

கருவிகள் தொண் ணூற் றாறும்நிர் மலமாய்க்
கனலெனு மதியுணர்ந் ததனாற்
காயம்வெவ் வேறாய்ச் சனனமுண் டாதற்
கனகாத் தினவொளி யறிய
மருவிமும் மலமுங் கருதிநீ ருதி
மதுரசஞ் சீவியென் னமுதம்
மதிநில வொளிவாய்ச் சுழிமுனை யிடபின்
வலமிடங் கதிர்மதி சூழும்
வருநம வாரி பொழியமும் மலமும்
மாய்கைய மகிழ்ந்துசஞ் சலம்போய்
மதியெனும் ரவியை மனம்புணர்ந் துணர
வாலையி னடிபணிந் தருள
குருமுனி மதுர வாக்கியத் துணர
குண்டலி வளர்மலர்க் கமலக்
கும்பமென் றிலகு மகாரகா ரணத்தாற்
குஞ்சர முகவனைத் துதிப்பாம். (3)

குஞ்சரத் ததித மதுரத்தே னின்பக்
குண்டலி வல்லமை யுடைய
குகைவாச ரறிய பிராணவாய் வதுவுங்
குடியிருந் திலகுமா நகரில்
நஞ்சரத் தமுத பஞ்சபூ தியாமும்
நடனவுல் லாசமே புரியும்
நாதவிந் துதித்த கருநெல்லி வளமும்
நன்மதி சாரைவெண் குழூங்
கஞ்சமா மலராங் கருதிய நலமாங்
கதியுறு யோகமென் மேலாங்
கருணைமெய்ஞ் ஞானம் விதிப்பதா லினிய
கனியெனு மாமதெனுங் கருத
விஞ்சையின் பெருமை விதிப்பதால் முன்னோர்
விட்டிடில் தொட்டதோர் தசையால்
விளங்கிய வன்னி ரவியொளி மேவு
மிகமூலப் புளியிருந் திடமே. (4)

மிகமூலப் புளியு மமுரியு மியல்பாய்
மென்மேலு மதீதமா யமுந்தி
விளங்கிடுஞ் சாரை யரவத்தால் மடங்கி
மிகவஞ்சு தலைநாகப் பாம்பை
உகமையாய்ப் புணரக் கடுசுண் ணமதாய்
உகரமென் றதுபுளி புணர்வாய்
ஓராண்டு பின்வாங்கி ரவிதனி லுலர்த்தி
ஓரிடி யாயிடித் ததனைச்
செகத்தில்வாழ் மனிதர் எவர்களு மறியாச்
சீலையில் வடித்துச்சூ ரணமாய்ச்
சிறியதோர் கலசம் அதனில்வைத் திலிக்கேன்
தேவியம் பிகைபதம் போற்றி
அகத்திய ரருளா லடிபணிந் தேற்றி
அக்கார வமுரிகொண் டிடவும்
அருணவுச் சமதி லறுவகை நீராம்
அகரம்விட் டுகரத்தை புணரே. (5)

AOH



அகரமா மாதி யந்தத்தி லுகரம்
அன்புட னதையுர மாக்கி
ஆண்டொன்று இந்தப் படிபிச காமல்
அடிவிட்ட தகன்றுசெல் லாமல்
உகரங்கொண் டேயம் மூலத்தின் வாசி
உங்கென்று தாரைகொண் டேது
ஒருகடி கையினில் நவத்துவார வாசல்
ஓடிடா வாசியா லழுத்து
பகருவேன் காலை மாலையு மிரண்டு
பழக்கம தாயப்பி யாசம்
பதறிடா மலுமே கண்டதா ரணையிற்
பாகமா யூதிடும் வாசி
விகற்பமி லேழா யிரத்திரு நூறு
விளங்குமூ லத்தினி லிசைந்து
வேறதாய்ப் பிரிந்த சுவாசமொன் றூதி
மிகுவளர் பிறையெனும் வகுப்பே. (6)

முதலாவதாண்டு.

வளர்பிறை யிருபத்தோ ராயிரத் தறுநூறு
வாசியு மூலத்தி லிருந்து
வாழ்விக்கு மாதத் தசதிங்க ளாண்டு
மருவிய அமுரிகொண் டிடவே
இளவுரு வாக விரண்டுதிங் களினில்
இலக்கவாஞ் சையையுமே வெறுத்து
எழுபத்தீ ராயிர நரம்புகள் வலுவாய்
எட்டுச்சா ணுடலெங்குங் கனலாய்
மருவிய வாசம் பிராணன்மேல் நோக்கும்
வாசியுங் கால்கொண்டு பரவும்
மதிரவி யிரண்டும் பிரகாசம் புரியும்
மனமொரு தலையாமோ ராண்டு
கருவுரு ளதனு லீராண்டு சென்று
கனகமா குந்தேகஞ் செழுமை
காரசா ரத்தைப் புவிதனில் மாந்தர்
கவைக்குத வாதெனப் பழிப்பார். (7)

இரண்டாவதாண்டு

பழக்கம தாக வாசிமூ லத்திற்
படித்துமே நாதவிந் ததனிற்
பரியதாய்ச் சொருப மாய்த்திரண் டதுவாய்ப்
பரப்பிர்ம ஒளிவதாய்ச் சைல
அழகென்ன சிசுவாய்ப் பாலன்போ லுருவாய்
அகாரவு காரத்தி னருளால்
அக்கினிச் சுவாலை யனலினு லெடுத்த
அசடிலாக் காயமென் றதுவாய்
உழவுவெள் ளாமை பயிரிடும் விளைவாய்
ஊமையாம் போலுரு வாகி
உகாரந்தா லமுரி வலுத்துக்கண் டதுவாய்
உயிருட லொன்றதாய்ப் பொருந்திச்
செழுமையாய் ரோகம் அருணநுட் பமதாய்
கேவியம் பிகையெனும் வசியந்
திரேகமா திதமும் ரவியொளி பகலாய்த்
தெளிவதா மிருளும்போ மதியே. (8

மூன்றாவதாண்டு

இருளது மாறி மதியொளி வாகும்
இராவினிற் பளிங்கது போலாம்
இரண்டுட் ஞண்டு சென்றபின் மூன்றில்
இனியென்ன இருதய மறியப்
பரிவமா மமுரி திறமது செழுமைப்
பருதியா முதற்பட்சங் காலை
பாகம தாக அடிக்கடி அருவி
பழமைமுன் வருவதும் வாரா
முருவதாய் மூன்று வேளைதான் வருமும்
மூலத்தின் புளியைச்சூ ரணமாய்
முக்கியப் பீங்கான் தனிலிட்டு அமுரி
மூன்றுசா மஞ்சென்ற பின்பு
உருவெனு மிரதந் தன்னிலிட் டுறவாய்
உண்டையுஞ் செய்துணர்ந் துடனே
உளவறிந் துண்டு பிராணவா சியைத்தான்
ஓமென்று கும்பித்து ஊதே. (9)



ஊதிடுந் தாரை யுறக்கங்கொள் ளுதலும்
உரத்தகூக் குரலது மாகா
உறுதியாய்க் கண்டந் தனிலுறும் வாசி
ஓசையை யெவர்களு மறியார்
ஆதியு மந்த நாதவிந் ததுவே
அண்டபிண் டங்களு மதுவே
அப்புவுப் பதுவே கருநெல்லி சாரை
அகாரவு காரமு மதுவே
கோதிலாக் கார சாரமு மதுவே
கோசமும் பீசமு மதுவே
குருமுனி யருளாற் புலத்தியன் விளங்குங்
குவட்டினிற் சித்தர்கள் பணிய
வாதிக ளறிய வைத்தியர்க ளறிய
வளர்யோக ஞானிக ளறிய
வரைமிகு மிந்த கற்பகுத் திரத்தை
வைத்துப்பூ சித்துப்பார் தனிலே. (10)

பாரினில் மூலப் புளிச்சுண்ணை முறைக்கப்
பதினெண்பேர் சித்தர்கள் மகிழப்
பணிந்துயான் றுதிக்க உலகினிற் சரக்கைப்
பக்குவ மாக்க விளிக்கேள்
ஆரிமி குத்த கருநெல்லிக் கனிதான்
அரிவிந்து என்னுமப் பதனுல்
அதுஒரு மணங்கு எவரு மறிந்திடா
தடக்கமாய்க் கொண்டொரு பாண்டம்
நேரதி லடக்கி நதிசலம் வாங்கி
நேர்மையா யிருமணங் கெடைதான்
நிரைத்துச்சா லதனில் இருவித பாகம்
நிர்மல மியல்புடன் புகட்டி
வேருற வில்லா தறுபது நாழிகை
மிகவுஞ்சேர்த் ததுநன்று யூறி
விழைவுறப் பிசைந்து பின்பறு பதுவும்
மேவிச்சென் றேபினர் விளக்கே. (11)

விளக்கமாய்ப் பிசைந்த பின்புமூன் றுநாள்
மிகத்தெளிந் ததுசுத்த சலமாய்
விதரணை யாக மண்ணினிற் றெளித்து
மேன்மையா மந்நீரை வாங்க
அளம்பெறுஞ் சுக்கான் பாளையங் கோட்டை
அதற்குத்தென் பாரிசம் விளைவு
அறிகுவாய் மூன்று காதத்திற் கப்பால்
அருவிபா யுங்*குறுங் குடியாம்
வளநிலஞ் சூழ்ந்து மறவர்கள் நாளும்
வாழ்புவி யதற்குத்தென் திசையில்
மகிழுறும் பூமி மலைவள மடர்ந்து
மல்லல்தா னியங்களும் நிறைந்து
விளைகுன் றின் சாரல் அதனடி வாரம்
வெட்டுவர் சுண்ணாம்பு பாலாம்
வெண்பளிங் கதுவாம் புட்பரா கத்தின்
விளங்குசந் திரனொளி வாமே. (12)

ஒளிமிகு மதியரம் பிரகாச மிலகும்
ஒருமணங் கதுசுண்ண நீரை
உள்ள மகிழ்தலோ டுலகோர்க ளறியா
உரியபாண் டத்தினில் நன்கு
தெளிவுடன் வடித்துச் சீக்கிர மிறக்கிச்
செழும்வன்னி மூட்டி யடுப்பிற்
றீர்க்கமா மனல்கொண் டக்கினி வீசத்
திறமாய்வைத் தெரித்திடும் போது
அழகிய வாலை கௌரிப்பெண் ணாளை
அகத்திலெண் ணித்தியா னித்து
அவள்பதம் போற்றி அன்புறப் பணிந்து
அதற்குமேற் பாண்டத்தை நோக்க
வழியுமே நுரைதான் வரும்பதம் வாங்கி
வரவரப் பின்புமா றுமல்
மதிசலஞ் சுண்ட எண்ணெய்வற் றிலகும்
மா§வக டுவர்க்கச டெடுத்தே. (13)

*குறுங்குடி—திருக்குறுங்குடி. §அகடு—பொல்லாங்கு



எடுத்தெடுத் துணர்வாய் இனிப்பத மாகில்
இலகிய நாதமென் றிரதம்
இசைந்தகுங் குமம்போல் நிறமது ஒளியாய்
இருப்பதி னியல்புகண் டினிப்பின்
அடுத்துட னிறக்கி ஆறவைத் தினிதாய்
அதனைப்பார்த் திடுமள வினிலே
அழகிய நிறமால் இருவெனு மொளிவாய்
அரிதளம் போலுமே பரிதான்
கடுத்திடி லிதுவும் அநீதமாய்ப் புளியிற்
கடுஞ்சுண்ண மெனுங்கரு விதுவாங்
கரையிலாத் தொந்த மீரஞ்சு தரத்திற்
கற்சுண்ணம் படியது மொன்று
தடுத்திடா மலுமே சலம்படி நாலு
தண்ணீர்தெ ளிந்ததை வாங்கிச்
சலத்தெளி வதனிற் புளிச்சுண்ணங் கரைத்துத்
தனியெடுத் ததனைவைத் திடுமே. (14)

எடுத்திடக் கசிவு மெண்ணெயு மதீதம்
இலக்கியப் புளியதின் சுண்ணம்
இப்படிச் சவுத்து இனியகற் பனைபோய்
இயம்பிடு வெண்மதி வெளிருய்
அடுத்துற வாக அநீதச்சுண் ணத்தை
அற்புத மாகவு ரைப்பேன்
அருட்படி காரம் வெண்காரஞ் சாரம்
அநீதமாம் வெடியுப்புப் பாறை
தொடுத்துடன் வகைக்குச் சமனஞ்சு பலந்தான்
சுகாதீத மாகவு மெடுத்து
சுகிர்தநற் பாண்ட மதனிலிட் டிதனைச்
சுயம்பெனு புளிச்சுண்ண வகைக்குக்
கொடுத்திரு பத்து அஞ்சுமே உறவாய்க்
கூறிய ஐம்பது பலத்தைக்
குறித்தொரு பெரிய பாண்டமிட் டதனிற்
குருவெனு மமுரிவிட் டிறவே. (15)

அமுரிபீ ராறு படியள விட்டு
அறுபடி கற்கண்ண மதனில்
அளந்துநீர் தாக்கிக் கரைத்துற வுணர்ந்து
அருட்பெற மூன்றுநா ளதன்பின்
அமுதவம் பிகையின் பதமலர் போற்றி
ஆதித்தன் காற்றுப் படாமல்
அதிரக சியமாய் அடக்கம்வை யில்லம்
அறிசதுர் நாட்கழிந் தந்நாள்
சமுசய மில்லாப் பாண்டத்தின் நடுவில்
தாமரொன்று தவறுமற் போட்டுச்
சங்கைகொள் ளாமற் பெருத்தபாண் டத்தின்
சமைது இறங்கவிட் டிரைவாய்ங்
குமுறிடா மலுமே தெளிவுநீர் வாங்கிக்
குறைவிலா தப்பில்வைத் தெரியக்
கொடுரமின் றிவரிதாய் ஒருமாக் கொப்பாய்க்
கொண்டுடன கமலப்போற் றியே. (16

காமக் கமலத்தி னிரும்போ றுறையுங்
கடல்நுரை யுறவது போலுங்
கசாதை யெடுக்க நீர்கள்சுண் டிடுமாங்
கல்மதைம் யாவுங் கழன்று
சோமனென் றெளியாய்ச் சுகாதித வெளிருய்
சுயம்பிர மாகச்சு வறுதற்
சூட்சமிப் பாகம் வருதற்பின் பாகஞ்
சுவறிடு மிரதம்போற் றைவம்
வாயப்பா லமிர்த மதுவெனும் பானம்
வளப்பமா மியல்புவாஞ் சனைபோய்
வஸ்துவாம் நாதம் வருதலைக் கண்டு
வண்மையா மமளிகொப் பளிக்கும்
காமப்பா லுணர்ந்த கசடருக் கிந்நால்
கருதிடிற் கழுதையாய்ச் செனனங்
கருவிலி னுதிப்பார் விவேயவந் தெய்துங்
காட்டொனு திதுகற்ப துவே. (1



கற்பம்பின் னூறுள் வழலையின் பெருமை
காட்டொணு ரகசிய ஞானக்
கருவெனும் பாண்ட மிறக்கிவைத் தாற்று
கனலெனுஞ் சுடாது தணிந்தாற்
பற்பம தாரும் ரவியினி லுலரப்
பாகமாய் வைத்தெடு வாரம்
பளிங்கதின் நிறமாய் அதிதசுண் ணமதாய்ப்
பாய்ச்சிடுங் குப்பியி லடக்கி
மற்பெட்ட கத்தில் வைத்திடு வாடை
வாசமும் வெளியில்வா ராமல்
மதியெனும் விந்து சந்த்ரபுஷ் கரணி
வாருதி அப்புவென் னதீதக்
தற்பர மெனும்பேர் அண்டமு மிதுவே
சதாசிவன் கங்கையு மிதுவே
சாரமா யிலகுஞ் சோதிப்ர காசச்
சராசர மதில்நிறை யொளியே. (18)

உப்பின் பேர்.

நிறைந்ததற் சொரூப ரோமநீ ரூசி
நிராமய நில்வுப்பென் றிதுபேர்
நிராதார மெனுமுப் பமுரிபஞ் சாட்சரம்
நிகரிலா உப்பிதை யுரைக்க
விரைந்தமா வென்னும் நடுவணை யெனுமாய்
விளங்கிய அவ்வெனு மெழுத்தாம்
மேதினி தனிலே சிறுவர்க ளமுரி
விரும்பிடு மூன்றுபத் திரண்டாய்ச்
சிறந்திட்ட செய்தி தனையுணர்ந் தினிதாய்ச்
செப்பிய பாண்டத்தில் நல்ல
தெளிவுவிட் டதனிற் கற்கண்ண நீரு
திருந்தமாய்ப் படிபதி னாறு
வரந்தரும் வாலை மலர்திருப் பதத்தை
மருவியா ராதனை செய்து
வளரமுரி யிற்குக்கி மனமது சலியா
மதுரமேலைக் கரைத்துவைத் திடவே. (19)

மதுதெளிந் தவர்போய் மதுரசஞ் சீவியாய்
மகிழமு ரியின்கச டகன்று
வாருதி யுவர்போய்ச் சுத்தகங் கையதாய்
வஸ்துவென் றதுமிக வொளிவாய்
இதுசதுர் நாளில் இணையிலா மதுமே
லெடுக்கவு மிதற்கடி நடுநேர்
இசையுமோர் பாண்ட மதனில்வைத் திருக்க
இனியநீ ருருவிபோற் சலமாம்
அதின்மையத் துவாரம் பக்குவஞ் செய்வாய்
அண்டமென் றதகிரு மாலாய்
அமுதமாய்ப் பரவிந் தியதாய்த் தெளிந்து
ஆறதாய்ப் பெருகியவ் வழியிற்
சுதனரு ளிலகு மூத்ததிற் கதிகந்
துய்யவெண் மதிநில வாகிச்
சுயம்பிர காச மெனுங்கார சாரஞ்
சுகாதிதப் பேரின்ப மெனவே. (20

வழலையுப்பு.

எனுமறு சுவைநீ ரிருவகைச் செயநீர்
இளகிய திராவகச் செயநீர்
எடுத்தக மதனி லிகலதா யுணர்ந்து
இடும்வன்னி கமலம்போ லிசைந்து
கனப்பொருந் தியநீர் கனலெனு மதுவாய்க்
கசடகன் றதன்றுரை விளங்கக்
கருதிடு மதுசூழ் கண்டுபோம் பொழுது
கண்ணாடி விளங்குபொன் னுருவாய்
இனமது பாகஞ் சுவறிடு மினங்கண்
டிறக்கிவைத் தாறச்செய் திடுபின்
எடைதயி ரதுபோல் இளகியுப் பதுவாய்
ஏகாக்ஷரமெனும் பொருளாய்த்
தனமறிந் துணர வழலையுப் பிதுவாந்
தனலது ஆறிச்சாந் தமதாய்ச்
சாரவிந் திரிய ஐந்துஅட் சரமாய்ச்
சாற்றிய வாறுகண் டிடுமே. (21



சாரமென் றிதனைக் குப்பியி லடக்கிச்
சங்கையில் லாமலி ரவியிற்
றரணிமா னிடர்கள் அனுசரி யாமற்
றுனதை வாரஞ்சென் றெடுத்துக்
காரமாஞ் சாரம் நாதவிந் தெனுமாய்க்
கல்லுப் பெனுங்கருத் ததனாற்
கதிர்மதி சுடர்தான் வழலையுப் பிதுபேர்
காட்டொணா ரகசிய மிதுகாண்
வேறொன்று மிலைபார் அடிநடு முடியும்
விளக்கினோம் அகத்திய ரருளால்
மேதினி வாழும் வாதிகட் கிதன்பேர்
வேறதாய் விதித்தனர் விமலாய்ப்
பாறையுப் பறிந்து பாகங்கண் டறிவோர்
பருதியென் றதன்மதி யறிவார்
பலபல நூல்க ளிதற்கொவ்வாச் சூக்ஷும்
பரமதை யறிந்தறி யாரே. (22)

பொய்மை வாதிகள்.

அறிந்தறி யாம லம்புவி மனிதர்
அனந்தசாஸ் திரங்களா ராய்ந்து
அகப்படா துருவின் கருவறியாமல்
அண்டக டாகமுந் திரிந்து
பறிமய வாசை பிடித்துப்போய்ப் பித்தர்
பாரிலுள் ளோர்களை மயக்கிப்
பலபல சாக்கைக் கருக்கிச்சுட் டதன்பின்
பணங்களைப் பரித்திந்தப் பாரில்
வெறிபிடித் தவர்போல் வேடமுற் றுலவி
வேசியர் மயல்மிக விரும்பி
விரகம தாகிக் கள்ளுடன் கஞ்சா
விதமுண்டு *வாமங்கொண் டலைந்து
நெறிதவம் மறந்து வாய்மதம் பொழிந்து
நிலையறி யாமல்ஞா னத்தை
நிகழ்த்தியே நாய்போற் குலைத்துமே திரிந்து
நிதமும்வாய் புலம்பியே வாழ்வார். (23)

---

*வாமம்—தீமை, விரோதம்.

வழியொன்று மிலைபார் வழலைமுப் பதிதம்
மருவிய முப்பதது மூன்றாம்
மறைப்பிலா மனுமே மூனா ரான் ளவர்க்கு
மதிரவி சுடரதாம் வஸ்து
தெளிதேயுக் கங்கம் அபூரியி லுப்பு
திருத்தமாய்ப் பலமொரு எடைதான்
செய்கைவா சலையாற் புளியெனும் லவணஞ்
செழுஞ்சுட ருப்பதாம் பாறை
உளிக்கடங் காது கல்லுப்பு லவணம்
ஒருபல வகைக்குமே சமனும்
உருவிது பரம்பன் விந்தொருத் திரை
ஒன்றதாய்க் குழிக்கல்லி லடக்கி
விழியட மாது வழலையைத் துறித்து
வொடியப்புச் செயநீர்விட் டதனை
விடாமலு மொருநா ளிடைவிடா மலுமே
விகற்பம்வா ராமலாட் டிடவே. (24)

விகற்பம்வா ராம லிடைவிடா ததனை
மிகவொளி பயனம தாக்கி
மெழுகெனும் வருத லுவமைய தாக
மென்மேல தாயாட்டி யெரித்து
புகலிலா வட்டம் மெழுகதை யெடுத்துப்
புளிதமாய் ரவிமுகந் தாக்கிப்
புனல்சொரிந் திடவுங் கனல்படத் தாலியிற்
புகழுவே வைத்தொரு வாரம்
அகமகிழ்ந் தினிதாய் அகத்திய ருட்டன்
னறியபொற் பாதநல் மலரை
அர்ச்சித்துப் போற்றி அகமதி லடக்கி
அவ்வக லகலநூ ரூபு
இகபர கதியி லுலகெலாந் துதிக்க
இதற்குமை சிலையு மேழ
இசைந்துசந் திரரா திவியி லுணர்ந்து
எடுத்துக் குடத்தினி லியம்பே. (25)



சுண்ணச் செயநீர்.

இயல்புடம் புகட்டி எடுத்ததை யாற்றி
இதற்குள் சுண்ணம்பார்த் திடினும்
எளிதல்ல முப்பு உலகத்தோ ரறிய
இறப்பிலப் பதுபிரிந் திடினுஞ்
சயலது அறியத் தந்தையின் விதியாற்
றவப்பய னறிவது கடினஞ்
சாத்திர மாறும் வேதநூல் மறையுந்
தத்துவ மாய்ந்தது கடினங்
குயில்மட மாது கொங்கைமின் னுளர்
கொஞ்சுமற் றஞ்சினும் வாலைக்
கோதையம் பிகைப்பெண் ணமிர்தபொற் கமலங்
குறித்துடன் தொழுதுஅர்ச் சனைசெய்
மயில்மலர் சூழும் மாகதப் பச்சை
வழலையென் றிதைச்சுண்ண மெடுத்து
மதிமலர் சூடி வனுத்திடுங் குப்பி
வசமதுள் ளடக்கினை பதனம். (26)

பதனமென் றதனிற் பலமொரு எடைகாண்
பாய்ச்சிடுங் குழிக்கல்லிற் பதமாய்
பாங்கிவைப் பதுநவாச் சாரம தோடு
பச்சைக்கற் பூரமவ் வெடைதான்
மதனசவ் வாது கஸ்தூரி புனுகும்
மயில்நிற மதுவண்டு பசுமை
வராகனென் றதுவே வகைவகை சமமாம்
வழலைமுப் பூரியின் சாரஞ்
சுதனரு ளாவின் கோரோ சனையுஞ்
சூட்டிடு மயனம தாக்கிக்
சுயவசி காமாந் தூயவெண் பீங்கான்
தொடுத்தநற் பளியில்வைத் தினிப்பார்
உதகமென் றிரதஞ் சயிலத்திரா வகமாம்
உன்னதச் செயநீர்சுத் தமிர்தம்
ஓரிரு மூன்று நாளதில் மதிநீர்
உவகையாய்க் குப்பியி லுணர்ந்தே. (27)

உணர்ந்து உன்னிதமாஞ் சலமெலா மெடுத்து
ஒன்றமில் லாமலு முவமை
உருவறிந் துசித மறுவித மறிய
உடனொரு பாத்திர மதனிற்
றனல்சொரிந் திடச்சவ் வீரம்நாற் கழஞ்சு
தனைப்பொடித் தகைமைய தாக்கித்
தனிரவி வாலைத் தம்பன மதுவே
தவப்பய னுறக்கல கதிரிற்
குணவிக சிதமாய்ப் பாவனைப் பதமாய்க்
குறித்திடில் முருக்கம்பூ வதுபோற்
குருமுனி யருளாற் றெருதின மதனிற்
கொடியசுண் ணமதாய் விளங்கும்
இணையிலா வதித வழலையீ தாகும்
எட்டெட்டு பருவத்தி னுனும்
இளகியே பொருமல் குளிகைசா ரணைக்கு
இனிப்பளிங் கதன் நிறம் வெளிரே. (28)

வெளுத்து நீ ரூதும் பதமறிந் தியல்பாய்
வெண்மதிக் குப்பியி லாற்றி
வெருபத னமதாய் அடக்கம்வைத் துடனே
வேதாந்தி யாய்ப்பரவி தன்னிற்
பழுத்தவஞ் செழுத்தாய் அமரியி லுணர்ந்த
பழம்புளி மூலமென் றெழுத்தாற்
பராபர பரையா மிருவகை யதனிற்
பாய்ச்சிடு வழலையுங் கடுகும்
எழுத்ததற் கியங்கி யின்பமாங் கனிகொண்
டினியுடல் வலுத்துவச் சிரமாய்
இருவகை யெழுத்தா யியங்குத லதிதம்
இவனுரைத் திடுவிளங் கரிய
தளதளத் தசையு மீரைந்து வாய்வு
தன்னைத்தா னொருவழி தனித்தற்
சதுர்மறை வேதச் சுயம்பிர காசச்
சைதன்ய தேகமீ தாமே. (29)



காலாவதாண்டு.

தேகமெண் சாணுந் தீவிர மாகி
செழுங்கனல் கதிர்மதி சூழ்ந்து
தேக மதீத முயிருடல் வலுத்துச்
சிவகங்கை நதியென வியன்று
ஏகமா யமுரி யானமூன் றதுபின்
இருவிதக் காரமுஞ் சாரம்
இரதமா மாறு கரைபுரண் டோடி
இடவல சந்திரசூ ரியனும்
புகழ்சது ராண்டு முதற்படி கடந்து
பூரண ரவிமதி சேர்ந்து
பூதாதிஐந்து ப்ருதிவியின் மூலம்
புகழ்பிராண வாயு விருந்து
முகனைய தாகி அகண்டதா ரையிலும்
முனைச்சுழி இடைபின்னு மறவா
மூச்சந்தி வீடு மதிரவி பீடம்
முன்னுல வியதாரை யூதே. (30)

யோகதாரணை.

ஊதிடுந் தாரை யகண்டதோர் வாசி
உலவிய உள்வழி நேச
உரியநித் திரைபோஞ் சோம்பல்வீம் பதும்போம்
உடற்கரு விகளெலா மொடுங்குந்
திதிலா வொளியாம் அகாரகா ரணத்திற்
றினந்தினங் காலையு மாலை
திருத்தமா யூதி ஓங்காரந் தன்னிற்
றியானமுற் றிருநாழிப் போது
ஊதிடு வாய்நீ அகாரகா ரணத்தில்
உகாரமாய் கற்பத்தை மறவா
துவ்வெனும் அவ்வி லுயிரெழுத் தாட்டம்
உடலுயி ரொன்றதாய்ப் போச்சு
சோதி யமுரியுஞ் சுழிமூலப் புளியுஞ்
சுகாதீதக் கற்பத்தி லிருந்து
தூக்கிடும் வாசி நாசியி லனுகா
சொக்கிடா மற்கண்டத் தாதே. (31)

கண்டதா ரையினி லூதிடும் வாசி
கபாலத்தின் வழியதாய்ச் சென்று
கருவல மாகச் சூழ்ந்துபின் னிடமாய்க்
கருதிலைக் துடனொரு கடிகை
அண்டத்தை வலமாய் ஆரா தனைசெய்
தாக்கனுயி னிடகலை யறிந்து
அசைவுமென் மேலா யடிபணிந் தருளி
அங்கொரு கடிகைதான் வசிக்க
மண்டல மூழ்து மொளியின்றன் விசிதம்
மணிவிளக் கதிகசோ தியினில்
மதியிருந் தோர்மை கடவுளி னருமை
வாசிநின் றாடிய தேசஞ்
சண்டனு மனுகான் றுயமென்ப தேது
சாத்யம சாத்யமு மேது
சதாசிவப் பகவான் நடனஞ்செய் திருப்பார்
சாயுச்ய பதவியு மாமே. (32)

பதவியும் நாலு கடந்த வகத்தியர்
பாதபொற் கமலபங் கயத்தைப்
பணிந்திரு பாத மலர்மணி வாசற்
பற்பம்நீ ராடிய நதியில்
முதலிரு மூன்று நான்குநிட் டையுமாய்
முத்தியுஞ் சித்திபெற் றுயன்று
மும்மூலக் கழியின் முனையில்நின் றாடி
முப்பாழுக் கப்புரந் தாண்டி
விதமஞ்சு காய கற்பமஞ் சாண்டு
விடுமுப்பு வழலையுப் பனுது
விளங்குவ தெதற்கு கருத்தொட்டு விரும்ப
விசிதமா யறுசுவை யற்ற
மதனமா மௌன வஸ்துபே ரின்ப
மதிவிளங் கியரவி ரண்டு
மாறிமா றிடவும் வயதறு நூறு
மாற்றுமஞ் சாவதஞ் சாண்டே. (33)



வேறு

ஆண்டு மூந்நூறு நாட்கழிந் திடலாம்
வேண்டு ஞான விதித்தகற் பத்தினால்
மூன்று மாறமுப் பாழுநீ றுகிடும்
ஞான்று மாள்வது நாளிலத் தில்லையே. (34)

இல்லை வையத்தி னைசையில் லார்களுக்
கில்லை யெய்வதென் னேறுந்துன் பில்லைபார்
துய்ய வெண்மதி சோமநீர் சூட்சமே
அய்ய மேது அஞ்சாச்சுது மாற்றுமே. (35)

மாத்துஐந் தெனினும் மறுப்படாத் தேகம்
வாசியும் வசமதாய் வழங்கும்
வளர்பிறை மதியால் மௌனம்வந் தெய்தும்
வாருதி புவாது விலகுஞ்
சாத்திய கற்பப் பாக்கள்முந் நூறின்
சங்கையை யாய்ந்திடும் புனிதர்
தனக்குள் விளங்குஞ் சைதன்யக் கருவைத்
தரணிமா னிடர்களி லொருவன்
பத்திர வானுப் பனிரண்டாண் டடுத்துப்
பலபல நூல்களும் படித்துப்
பருதியென் றறிந்து மதியுற வாகிப்
பான்மே கதியெனப் பணிந்து
காத்துசற் குருவின் அனுக்ரகம் பெற்றுக்
கதிரவ னெனுமதி யளவாங்
கற்பசா தனையிற் காயமும் வலுத்துக்
கடவுளின் சித்தமு மாவார். (36)

சித்தராய்ச் செனன மெடுத்துமெய்ஞ் ஞானஞ்
செகத்தினி லுதிரமாங் கருவிற்
றெளிந் தன்னை கர்ப்பக் குழிதனில் விந்து
செனிக்கச்செய் விதமன்னுட் பருவம்
வித்துப்பாய்ந் துதித்து நாதஞ்சேர்ந் துணர்ந்த
வேதமாம் யோகநிட் டையினால்
விந்துநா தமுஞ்சே ரம்சத்தி னளவால்
விவேகம்வந் திடுமென வறியார்.

சுத்தநீ தமதி ரவிதனை யுணர்ந்த
அபாதுரக் குழியதிற் பொருத்தஞ்
சூட்சமா ரறிவ தரிதரி தமரி
சுயசுத்த ஞானபேரின்ப
முத்தமி முணர்ந்த அகத்திய முனிவர்
முறைதவ ராமனு மூலகில்
மொழியவா ருதியின் கடலுவர் நீங்கி
முத்தியுஞ் சித்திபெற் றனரே. (37)

பெற்றபே ரநீத கற்பசா தனையைப்
பேசுவ தெளிதலப் பேசார்
பேரின்பக் கடலின் மூழ்கியக் கரையிற்
பெரும்பதி யடைந்தபண் போர்கள்
சித்தர்க ளூர்ந்த மதிவளர் பானம்
சிரஞ்சிவி பதவியிற் றெளிய
தேகசித் தியுமஞ் சாண்டுடற் பவமே
செயப்பெறக் கற்பமுண் டுறவாய்
நித்தமுங் காலை மதியில்முப் பதிதம்
நிகழ்ந்திடுங் கடுகள வெனினும்
நீங்கிடா மனுமே நெறியிவரின் றுயர்ந்து
நெஞ்சக மெனுமிடை கற்கொண்
டுற்றிடும் வாசி பின்கலை கருதி
உயர்ந்தில கியசுழி மூல
உவமைகண் டுதிப்பி ராணவாய் வதனை
உம்மென்று நோக்கநற் சுகமே. (38)

வேறு.

மேலா தார மிருப்பிடம் வாசிதான்
ஞால மாவதிற் சூட்ச மிருப்பிடம்
ஆல கால வமிர்தசஞ் சீவியாங்
கோல மிவ்வாறு குறிப்பறிந் தாருமே. (39)

வைதுந் தாரையோ ரஞ்சதா மாண்டிவில்
நாத விந்து நடத்தையிவ் வாறினல்
வேத சாரம்வெண் சாரைப்பிரபல்யம்
வாத வித்தை வசியம தாருமே. (40)



வசிய வாவென வங்சிங்கென் றேயின்பு
விசய ராஜயோ கஞ்செய் விதிப்படி
திசை யெனுங்கலை வாயுவொன் றுகிடில்
தசை யெனும்உரு வந்தானென் றுகுமே (41)

ஒன்றேழு ஓர்பத்தி ராயிரம் நாடியில்
என்றே யிருபத்தோ ராயிரத் தறுநூறு
நின்றே யுதித்திடும் நீங்கு கலையெனும்
நன்றே யொருமித்து நாடிடு மாவதே. (42)

நாடியோ மெல்லொரு நற்கடி கைப்பதம்
ஓடிய தோர்நவத் துவாரயோ டாமனும்
மேடிய வாசி யிழுத்துமேல் நோக்கிட
ஆடிய வண்டரண் டங்க ளுலாவுமே. (43)

அண்டம் புக்கும் அழுத்தினல் வாசியை
தெண்டி ரைக்கடற் றிசையெட் டுலகெலாஞ்
சென்று மேவித் திருநட னம்புரிந்
தென்று மின்று மிவர்க்கொரு நாழியே. (44)

ஆருவதாண்டு.

நாத விந்து நளினமா றுண்டுபார்
சூதவித் தைச்சக சூக்ஷ்ம தேகமாம்
பூத மைந்து புகழ்ந்திருந் தேயிடஞ்
சாதனஞ் செய்தன் லையறி யார்களே. (45)

விந்து சித்த விதமறி யாமனும்
மைந்த ரான வகைதெளி யாமனும்
கந்தை சுற்றிய காமக் குழியினில்
இந்திரி யம்விட் டெங்கு மடிந்தாரே. (46)

மடிந்தி டாமனு மாய்கை யகற்றிடா
அடந்து மூப்பா ழதுகடந் தேறிடா
உடந்து யோனியுல் லாசம றந்திடா
நடந்து வாசி நதிகண் டுலவுவரே. (47)

உவ்வும் அவ்வும் உடலுயிர ட்சரம்
மவ்வும் நவ்வும் மதிரவி யாகிடிற்
சிவ்வும் வவ்வுஞ் செழுங்கனல் வாயுதான்
யவ்வு மொவ்வு மகாரத்தி லஞ்சதே. (48)

அஞ்சு கூடி யமைத்த பிரபல்யப்
பஞ்ச பூதம் படைத்த பலனறி
நெஞ்ச றிந்து நிலைநின்ற வாசியை
அஞ்சு மூன்றி லடக்கவல் லார்களே. (49)

அஞ்சு மூன்றும் அகார உகாரமாய்ப்
பஞ்ச தாது படைத்த பரமதாம்
நெஞ்சில் நின்று நினைத்த பொருளறிந்
தஞ்சி டாமற் றரிதமா யூதிடே. (50)

ஊத ஊதஉன் னுக்குட்ப்ர காசமே
நாத விந்து நடத்தை யறிந்திடில்
வாத சித்தி வருமோ ராண்டினிற்
பேதம் வாராப் பெருவெளி மூலமே. (51)

மூல மான முனைச்சுழி நிர்மல
வாலை குண்டலி வச்ரக் குகையினிற்
ஞால வாசி நகாரம் பிருதிவியில்
சால நாடி யடர்ந்து முளைப்பதே. (52)

அடர்ந்து நாடியிற் சோதிப் ரகாசமே
நடந்து வாசி நயனங்கீழ் வாசியிற்
படர்ந்து மேபன்னி ரண்டுமீ ரெட்டுமாய்க்
கடந்து சோமன் கதிரவ னுதமே. (53)

கதிர் முனைச்சுழி காரத்தைப் பற்றிடும்
மதி ரவிமலம் வாருதி யாடிடும்
விதி யிருந்து விளங்கிடும் வாசியுந்
ததியும ஞானச் சுகாதீதம் பாருமே. (54)



ஏழாவதாண்டு.

ஆதியு மாறு சுகங்கண்டு எழினில்
ததியின் மூலம் நளினமொன் றுகியே
நிதியு முப்பு நிறுத்துக் கடுகுவை
கதியுங் கற்பங்கா லைமாலை யுண்டிடே. (55)

உண்ண உண்ண உனக்குட் பிரகாசமே
எண்ண எண்ணவெட் டெட்டு மறியலாம்
பண்ணு நூல்மறைப் பாஷையீ ரெட்டதும்
மண்ணும் விண்ணும் மருவிநின் றுடுமே. (56)

மருவ வும்மதி மாய்கை யகற்றிடும்
உருவ றிந்துட லுன்னுடல் காண்கிலார்
திருவ றிந்து செகசால மாடலாங்
குருவ றிந்து குளிகைசெய் வோர்களே. (57)

குளிகை என்ன குருவென்ன வாசிதான்
வழிய றியார் வழலைப் பெருமைதான்
அழிவ தில்லை யகாரவு காரமாங்
கழிவ துண்டோர் கருவறி யார்களே. (58)

கண்ட பேர்சிலர் கண்டுங் காணார்சிலர்
உண்ட பேர்சிலர் உண்டுமுண் ணார்சிலர்
விண்ட பேர்சிலர் வெற்றிகொண்டோர் சிலர்
அண்ட பிண்ட மறிந்தறி யார்களே. (59)

அறிதல் வாத வயித்தியஞ் சித்தியாங்
குறியும் யோகக் குளிகைச்சித் தாவதும்
நெறியுமெய் ஞானம் நிலைத்திடுந் தத்துவம்
பிரிய மாஞ்செகப் பெண்மயல் தள்ளிடே. (60)

மாயா சித்தியா மற்ப மனிதரும்
ஓயா வாசியி லூதிடுஞ் சாயலுந்
தோயா வெண்மதிச் சோதி விருக்ஷமுஞ்
சாயா விருட்சமுந் தன்னுக்குள் ளறிவதே. (61)

தன்னைத் தானேசா தித்துக்கண் டோர்கட்கு
அன்னை தன்னு ளறிந்தமு தூட்டுவாள்
உன்னு ளுகந்துநின் றூடிடு மாறினில்
முன்னமே மொழிந் தூதிடும் வாசியே. (62

வாசி நின்று வளர்பிறை யானதால்
மாசி லாமதி மாலின் மயத்தினுற்
காசினி யோர்கடி னைக்குள்ளே போகலாம்
நாசி நுனியில் நாடித் துதித்திடே. (63

நாடுங் கற்பம் நயந்திரு நாளினில்
ஆடுங் காயமைங் காயமுஞ் சித்தியாஞ்
சாடு மாரணத் தைலமி றக்கலாந்
தேடு மூலப் புளியின் செயலதே. (64

செய்கையு மூலப் புளிச்சுண்ணங் காரநீர்
வைகைய தாமதி வாருதி நீர்ச்சலம்
வெய்கையு மாஞ்செய நீரைவிட் டப்பதம்
பையநீ சாடிப் பகர்வ தறிந்திடே. (65

அறுசு வைச்செய நீரதைக் கொண்டபின்
மறுப்ப டாமல் மதியைவிட் டாட்டியே
குருக வும்புன்னைக் காயள வாகிடில்
இருத யத்தினில் மேலும்வி ளங்கிடே. (66)

மேல தாகி விளங்கிடுங் காலைதான்
வாலை யாய்வடி வாகும் வயதெனும்
வாலை யிவ்வித மாறி வருகையிற்
றால சூக்ஷ்ம சுகாதீதங் காணுமே. (67)

காணும் யோகக் கருத்தறிந் தாடிடத்
தோணும் ஞானச் சுயம்புலிங் கேசரே
தாணு மேதுரும் பாகிடுந் தூணதாம்
வேணு மூப்பு விரும்பிடுங் கற்பமே. (68)



கற்ப சாதனை கைவச மாகிடில்
அற்ப தேக மதுவச்ரத் தூணதாந்
தற்ப தாவர சங்கை யறிவதுஞ்
சொற்ப மல்ல சுடரொளி சூட்சமே. (69)

சுடர னந் தஞ்சிவ சூக்ஷ்ம சடாதாரம்
உடன றிந் தேயோக சாதனை யுண்மையின்
நடனபொற் பதகம லாலயஞ் சூழ்மதிக்
கடவுளின் பதசுகக் காட்சியைப் பாருமே. (70)

பார்க்கப் பார்க்கப் பரப்ரம்ம ரூபமாய்க்
கார்க்கச் சற்குரு கற்பமெட் டாண்டினிற்
பூர்க்கு மாற்றுப் புகழிரு நாலதாம்
ஆர்க்குந் தோணு தனிசய மாகுமே. (71)

ஒன்பதாவதாண்டு.

அதித வாசிய றிந்தொன்ப தாண்டினில்
விதிம றைப்படி மேற்கண்ட தாரையில்
மதிம லர்த்திரு மாலின் தரிசனங்
கெதிபெ றுஞ்சிவ கெவுனங் கொண் டேறுவாம்(72)

கெவுன வாசிவா வாவெனக் கேசரி
மவுனங் கொண்டு மதியமு தம்முணர்
புவனம் பாயப் புகழ்கண்ட தாரையிற்
கவன மாய்க்கருத் தங்கனங் காருமே. (73)

காரு மேகலை யாமலவ் வாசியைப்
பாரு மோரத்னம் பார்க்கப் பழக்கமாய்
தேரு மேனிலைத் தொன்பதுஞ் சென்றதாற்
சீரு ஞானச் சிவசத்திக் கூறதே. (74)

சத்துசித் தஞ்செக சர்வலோ காதிதஞ்
சித்தி பெற்றுத் தசநிஷ்டையு டையராய்
வெத்தி யோகமெய் ஞான வசியமாஞ்
சுத்த வாறுச் சுகம்பெறு வார்களே. (75)

### பத்தாவதாண்டு.

சுகாதி தம்மெனுஞ் சூக்ஷக் கருவறிந்
தாகாச பரியந்த மட்டசித் தாடுவான்
பூகாந்த காலத்தி லொருகோடி நாள்வரை
ஏகாந்த மாந்தச திட்சையைப் போற்றுவாம். (76)

திட்சைபத் தானுயர் தேகம்வ ளர்த்தது
மோட்ச சுகாதித முப்பாழுங் கண்டது
சாட்சியின் னால்சக லமுமொ ழித்தது
காட்சியும் பெற்றுக் களம்பெறு வார்களே. (77)

### மூலிகைகளின் வகை.

பெத்த பேறு பிறவி யொழிந்தது
பத்து மாற்றுப் பசும்பொன் விளைந்தது
உத்துப் பார்க்க உருவெளி யாச்சுது
சித்த ரான செயலறிந் தோதுவாம். (78)

ஓதுஞ் சித்த ருலாவும் பொதிகையிற்
சோதி விருக்ஷஞ் சுணங்க விருக்ஷமும்
பூத விருக்ஷம்பொற் கள்ளிபொற் றாமரை
வாத மூலி வளர்கரு நொச்சியே. (79)

கருநொச் செந்திரு கற்றாழை யிற்செழும்
பெருநாம் வெண்ணொத்தி பின்னுங்கை யான்கரு
அருநாம் நீலக்கொ டிவேலி சீந்தியுந்
அமிதம் வெண்கண்டங் கத்திரி தோனுமே. (80)

தோனுஞ் செங்கள்ளி துவர்கொடி வேலியுங்
காணுங் கருத்துங் கதிர்மூலி கையுடன்
பூணும் ரோமம் புகழும் விருக்ஷமும்
ஈணுங் க்தலி யிதுகருப் பாகுமே. (81)

கரிய வாம்பல் கருப்பாமா தண்டையும்
பிரிய செங்கோவை பெலத்த திரைப்பூடும்
புரிய தோர்திலப் புரண்டி கருநெல்லி
அரிய தோராழு கண்ணி விருக்ஷமே. (82)



தோற்றுந் தோற்றுத் தொழுகண்ணி விருக்ஷமுஞ்
சாற்றுஞ் சாயா விருக்ஷத்தின் நேர்மையும்
பார்த்த பேர்கள் பரியேம கற்பமாங்
கார்த்தெ டும்காய சித்திக் குகந்ததே. (83)

### வேறு

காய சித்திக்கு றய்மிரு பத்தேழுங்
கற்பமுண்டு தசவாண்டு சென்றபின்
தூய மூலியோவ் வொன்றொரு பக்ஷமுஞ்
சுத்த மாகச் சமூலமாஞ் சூரணம்
தேய மாயிரு காலையு மாலையும்
நின்று மேபவங் கற்கண்டு பத்துக்கொன்
றுயச் சேர்த்து அதனோட் கொள்ளவும்
ஆன பின்னதி நட்டத்தைப் பாருமே. (84)

### வேறு

பாருஞ் சோதி விருக்ஷத்தின் பாலதை
நீரு மேபலம் நேரிடை யஞ்சதாம்
வாரு பீங்கான் றனிலிட் டுணர்வதாய்த்
தீரு மம்பிகை சீர்பாதம் போற்றிடே. (85)

போற்று வாய்புக ழம்பிகை பாதமே
ஏற்று வாசி யிடபிங்க லையதில்
மாற்றி பூதிநீ வங்கென் றிருத்தியே
போற்றி யப்பலைப் பாதம் புகழ்ந்திடே. (86)

பாதம் பணிந்துபால் பாகமாய்க் கொண்டிடு
வாத மெண்பதும் வாருதி புக்கிடும்
ஓதும் பித்த மொளிந்துநாற் பத்திரண்
டோது சேத்தும மிருபத்தொன் றேகுமே. (87)

எழுபத்தி ராயிர நாடி நரம்புகள்
அழுந்தி யேம மதுபோ லிறுகிடும்
விழுந்தி டுஞ்சட மென்மேலு மழுத்திடும்
எழுந்து போம்வினை யிருவினை யில்லையே. (88)

இல்லை யேநம னிப்பாலை யுண்டிடிற்
றெல்லை யில்லாச்சோ திவிருக்ஷத்தின் கீழ்

கல்லு மேசா டில்லாச் சுவஸ்தமாய்
வல்லாம் வஸ்த்ர மடித்ததின் மேலேறே. (89)

இருந்து மேற்படுத் திவிரபுன் மனிதனுய்
பருந்து பாசிப் பயர்பச்ச ரிசியும்
அருந் தவமறி யாதாரின் நிர்ணயம்
பொருந்த வாகாப் பிழைவாக் காய்ச்சிடே. (90)

வாத பித்த சிலேத்ம சுரமது
தாது பற்றிச் சடத்திற் சுவாலையாய்
காத டைத்துடன் காந்தி செழுமையாஞ்
சேதம் வாராச் செவியு மடைக்குமே. (91)

வேறு

தேக முச்சி புருவத்தின் மையமும்
ஆக மதன்கீழு மார்பதன் மையமும்
ஓலதின் கீழ்நடு வுற்றிடும் நாபியிற்
சூலை கட்டிச் சுரதோஷைத் தோன்றுமே. (92)

தோன்றி டுஞ்சட் மாதிதஞ் சூழ்த்திடின்
நீண்டி டும்நெடுஞ் சங்குப் பழமதாய்
மூன்றிடு மூன்றே முக்கா லதுகடி
தாண்டி டாமற் சலசஞ்ரி பூட்டிடே. (93)

தாண்டி டாதிரு தாளைப்பி டித்திடும்
வேண்டித் தந்தமு மேல்சிறொன் முகிடுத்
தாண்டிக் கிட்டித் தடர்ந்துடன் வாங்கிப்பின்
ஊண்டி யோர்படி பூட்டி ஈமாயமே. (94)

வெட்டிப் பார்க்க வுடைந்துமே கட்டிகள்
காட்டி லேகுங் கன தர்க்க வாசமாய்
மேட்டி யாயுடல் மேலாஞ் சவுங்கியம்
நாட்டி யேநாக தாளி யரைத்திடே. (95)

தாளி யான தழைமை யரைத்துடன்
கோளில் லாமற் குழைத்துச் சடமெல்லாம்
பாழில் லாமற் பதமாய் நதிதனில்
நாளில் லாமல் நயத்து குளித்திடே (96)



நயந்து இவ்விதம் நாடினுற் றேகமும்
மயமுங் காயமா மாசித்தி யாவமாய்ப்
பயமு நீங்கும் பதினன்கு லோகமும்
நியம மாகு நிலவொளி வாகுமே. (97)

நிலவு போல்விழி நீளொளி வாகிடுந்
துலவு அஞ்சனஞ் சோகிப்ர காசமாய்
வலுவ தாகிடும் வாதவ சியமுங்
கொலுவ தாய்ப்பறை கொஞ்சுவாள் பாங்கிலே. (98)

பத்து மாற்றுப் பரியோமத் தேகமாஞ்
சுத்த ஞானச் சுடரொளித் திபங்காண்
அத்தன் பாத மனுதினம் போற்றியே
இத்த லத்திலென் னுளுமி ருப்பரே. (99)

என்சாண் தேகமெ முகுவச் சிரமதாம்
உண்மூ லத்தின்மூ லாக்கினி மீறிடும்
மண் ணும் விண் ணும் வளர்பிறை யாதலால்
அன்ன லாதியன் பின்பதம் போற்றுவாம். (100)

வாசஞ் செய்தல் மதிரவி கற்பினை
நேசம் பூரணம் நேர்மை நெறிகளாற்
பூசி தப்பரி பொன்சொரு பங்களை
வாசி யிறால்மய மாற்றம றிவரே. (101)

மாறி மாறி வசியஞ்செய் வாசியால்
ஏறி யேறி யிடகலை பிங்கலை
மீறி மீறிமென் மேனுஞ் சுழிதனில்
வீறி வீறி விளங்குவ தென்பதே. (102)

தென்பொதி கைவளர் தேசிக ரூர்முனம்
அன்பருக் கன்பரா யறைந்த மொழிதனைப்
பொன்போலும் நல்ல புலத்தியர் சொல்லிய
இன்பமாம் ஞானமுன் னூறு மதிதமே. (103)

அதிக சோதி விருக்ஷத்தின் பாலினில்
விதிய தாகமென் மேலு முறைப்படிப்
பதிவ தாய்ப்பரம் பத்துப்பத் தாயினை
மதியி றங்குதல் மார்க்கம தாகுமே. (104)

மார்க்க மாய்மதிப் பாதுமேல் கிழதாய்த்
திர்க்க மாகத் திகட்டாமல் முட்டியே
சேர்க்கை யாகத் தெளிந்துமே கிழூடன்
பூர்க்கச் செந்தனைப் போட்டெடுத் தாற்றுமே. (105)

ஆத்தி டப்பத மையஞ்சு மாற்றதாஞ்
சூத்தி ரம்ஆகுஞ் சுணங்கள் விருக்ஷப்பால்
போற்றி நிம்முன் புகழ்ந்தநற் செய்கைதான்
மாற் றதிக மயமென்ன பாருமே. (106)

மயம திதம் வசனித்த மூலிகள்
சுயம தாகிடுஞ் சூக்ஷம நா லாயிரம்
தியம மீதென நோறித் தோதினேஞ்
செயல திதர்சித் தாடலாம் பார்த்திடே. (107)

ஆடு மூலிகை பட்டமா சித்தினைத்
தேடு மின் னூல் செகத்தி லரிதிதை
நாடி னல்வேதை நாங்க ளருளிய
கோடிக் கொன்று குவலயத் தோர்களே. (108)

கோடா கோடி குருமுனி வாக்கியந்
தேடா மற்றேடித் தியங்கினர் மாணவர்
நாடி நாடி நயத்துரு வாகிய
மேடி மேட்டி மிகுத்தநன் னூலிதே. (109)

இன் னூல் கற்பமெ னுமொரு முந்நூறும்
முன்ன மேமுடி வாயிரம் பார்சரி
தன்ன மேயரு ளம்பிகை பொற்பதஞ்
சொன்ன ஞானச் சுருக்க முடிந்ததே. (110)

சுருக்க ஞானர் சுகாதிக சூத்திரம்
பெருக்க வாழிப்பா றலையுங் குருகர
குருக்க ளாசான் குறுமுனி சீர்பதம்
உருக்க மாயுட னற்பதம் வாழ்த்துவாம். (111)

கடைக்காண்டம் 5102

முற்றுப்பெற்றது.

LC
1135